# அருள் ராஜயோகம்

Volume-12 Issue-02 Augest-2025
Price Rs. 25

மலர் –12 இதழ் – 02 ஆகஸ்ட்–2025

★ ஆன்மீகம் ★ ஜோதிடம் ★ மருத்துவம் ★ மாதஇதழ்



SRJ "ராஜயோகம்"
Dr. K.ராம் Ph.D., (USA)



## ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி சிறப்பிதழ்

"ஒரு மனிதனை யார் கைவிட்டாலும்
ஆன்மீகம் கைவிடாது!"

– Dr. K.ராம் Ph.D., (USA)

இம்மாத வெளியீடு

# இப்போது விற்பனையில்..!




ஓர் ஆண்டின் 366 நாட்களுக்குரிய திருத்தலங்களின் ஸ்தல வரலாறுகள், ஸ்தல பரிகார குறிப்புகள், ஸ்தலத்திற்கு உரிய மந்திரங்கள், ஸ்தலத்தின் பூஜைக்குரிய விளக்கங்கள், ஸ்தல அமைவிடம், வழித்தடங்கள் அத்தனையும் தாங்கி அரிய படைப்பாக போற்றி பாதுகாக்க வேண்டிய அரிய பொக்கிஷம் இதுவே!

**தவற விடாதீர்கள்..!**

**இன்றே வாங்குங்கள்..!**

நமது பதிப்புகள் அனைத்தும் கிடைக்கும் இடங்கள்


*Publishers:*

**APSARA PUBLICATIONS**, # 18/67, P.V.Koil 1st Street, Pudupet, Royapettah, Chennai - 600 014
Phone: 044- 2811 6770 | Cell: 72999 21880 / 88386 38900
E-mail: apsarapublications@gmail.com | www.apsaraepublications.com

**விஜயா பதிப்பகம்**
20, இராஜ வீதி, டவுன் ஹால், கோவை -1. போன்: 0422- 2394614, 2382614, செல்: 90470 87058
மற்றும் அனைத்துக் கிளைகளிலும் கிடைக்கும்

**ஸ்ரீ தயவு சித்தாஸ்ரமம்** திருவண்ணாமலை - 606 603. செல்: 99448 00220

அருள் ராஜயோகம்
Volume-12 Issue-02 August-2025
மலர் – 12 இதழ் – 02 ஆகஸ்ட்-2025

●ஆன்மிகம் ●ஜோதிடம் ●மருத்துவம் ●மாதஇதழ்

## அன்புள்ளம் கொண்ட வாசக- வாசகியர்களுக்கு

ஆழமான ஆன்மீகத்தையும் அறியவேண்டிய சாஸ்திரத்தையும் அற்புதமான மனோதிடத்தையும் வாரி வழங்கும் அருள் ராஜ யோகம் என்கிற அற்புதமான ஆன்மீக மாத இதழை பார்க்கக்கூடிய படிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்த பாக்கியவான்கள் ஆகிய உங்களுக்கு குலதெய்வ ஆசியும் நவகிரக அனுகிரகமும் முழுமையாக கிடைக்கவும் நாளும் பொழுதும் நன்மைகள் பெருகவும் உண்மையாக பிரார்த்திக்கின்றேன்.

முழு முதற்கடவுள் ஸ்ரீவிநாயகர் ஆவார். பிள்ளையார் சுழி போட்டு செயல் எதையும் தொடங்கினால் வெற்றி நிச்சயம் என்பது வழி வழியாக கடைபிடிக்கப்படும் நம்பிக்கை ஆகும். ஆறு, குளக்கரை என்று இல்லாமல் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருப்பவர் ஸ்ரீவிநாயகப் பெருமான். இவரது அவதாரத் திதி சதுர்த்தி ஆகும். ஒவ்வொரு மாதமும் வரும் வளர்பிறை, தேய்பிறை என இரு திதிகளில் தேய்பிறை சதுர்த்தி சங்கடஹர சதுர்த்தியாகக் கொண்டாடப் படுகின்றது. ஆவணி மாத சதுர்த்தியே ஸ்ரீவிநாயகர் சதுர்த்தி ஆகும்.

தமிழ்நாடு மட்டுமின்றி வட மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலும் ஸ்ரீவிநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படுகின்றது. அவரது சிலைகள் மூன்று நாட்கள் பூஜிக்கப்பட்டு, ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, நீர் நிலைகளில் கரைக்கப்படுவது வழக்கம்.

ஸ்ரீவிநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, இம்மாத இதழை ஸ்ரீவிநாயகர் சதுர்த்திச் சிறப்பிதழாக, வெளியிடுவதில் மகிழ்கின்றோம். ஸ்ரீவிநாயகர் பற்றிய தகவல்கள் மட்டுமின்றி, வழக்கமான அம்சங்களும் இடம்பெறுகின்றன ஸ்ரீவிநாயகருக்கு உரிய சிறப்பிதழில், அவருக்குரிய போற்றிகள் இடம்பெறுவதே சிறப்பானதாக இருக்கும். எனவே அவை ஒவ்வொரு பக்கத்திலும் இடம்பெற்று உள்ளன. அதனை அனைவரும் விரும்புவீர்கள் என நம்புகின்றேன்.

### நெஞ்சிற்கினிய நேயர்களே!

ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது என்ற என்னுடைய ஆழமான ஆன்மிகத்தையும் பதிவு செய்து அகில உலகத்தில் உள்ள அத்தனை தெய்வங்களின் அனுக்கிரகமும் ஈரேழு உலகத்தின் உள்ள எல்லா சக்திகளின் ஒட்டுமாத்த ஆசிர்வாதமும், உங்களுக்கும் உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டிய பிரார்த்தனையோடும் வாழ்த்துக்களோடும்..






ஆசிரியர்
S R J "ராஜயோகம்"
Dr. K.ராம் Ph.D., (USA)

ஓம் விநாயகனே போற்றி, ஓம் வினைகள் தீர்ப்பவனே போற்றி, ஓம் அரசமரத்தடி அமர்ந்தவனே போற்றி



## சிறப்புக் கட்டுரை:

# எந்தெந்த நாட்களில் விரதம் இருந்தால் நல்லது,



உலகெங்கிலும் உள்ள அருள் ராஜயோகம் வாசகர்களுக்கு எனது இனிய நல்வாழ்த்துகள்! இம்மாத சிறப்புக் கட்டுரையாக நாம் பார்க்கப் போவது, எந்தெந்த நாட்களில் விரதம் இருந்தால் நல்லது, என்னென்ன பலன்கள் அதனால் ஏற்படும் என்பது பற்றித் தான்! பொதுவாகவே விரதம் அப்படிங்கிறதைப் பற்றி, நாம் நிறையப் பேர் கேள்விப்பட்டிருக்கிறோம். நிறைய பேர், தன்னுடைய வாழ்க்கையில் விரதம் இருந்தால், ஏதாவது ஒரு வகையில், முன்னேற்றம் கிடைக்குங்கிற, எதிர்பார்ப்பு இருப்பதால், அந்த எதிர்பார்ப்பு, ஆசைகளோடு, விரதம் இருந்து கொண்டு இருக்கிறோம்.

அந்த மாதிரி விரதம் இருந்தால், எந்த நாளில் விரதம் இருந்தால், எந்த மாதிரியான நன்மை கிடைக்கும்? எந்த நாளில் விரதம் இருந்தால், எந்த மாதிரியான தோஷம் நிவர்த்தி கிடைக்கும்? அப்படிங்கிற விஷயத் தைதான், இந்தக் கட்டுரையில் பார்க்க இருக்கிறோம்.

பொதுவாகவே,எதார்த்தமாக சொல்ல வேண்டும் என்றால், உண்மையை சொல்ல வேண்டும் என்றால், கட்டுரையைப் படிக்கிற உங்களுக்கு, நன்மையை சொல்ல வேண்டும் என்றால், விரதம் இருக்கச்சொல்லி, எந்த ஒரு சாஸ்திரமும், நமக்கு வலியுறுத்திச் சொல்லவில்லை, அப்படிங்கிறதுதான், எதார்த்தம்.

அதாவது, விரதம் அப்படிங்கிறது, நம்ம நிறைய பேர், என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறோம் என்றால் சோறு சாப்பிடாமல், அல்லது ஒரு வேளை சாப்ஷபிடாமல் இருந்தால், அது விரதம் அப்படிங்கிற மாதிரி வந்து, ஆன்மீக ரீதியாகச் சொல்வதைப் பார்க்கிறோம்.அதே மாதிரி, ஒரு நேரமோ, இரண்டு நேரமோ சாப்பிடாமல் இருந்தோம் என்றால், உடலியல் ரீதியாக உடல் சுத்தமாகிறது என்று மருத்துவம் சொல்கிறது.

இது எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு, விரதம் என்பது என்னவென்றால், சாஸ்திரம் சொன்ன உண்மையான விரதம் என்னவென்று கேட்டால், அசைவ உணவுகளைத் தவிர்த்து, அசுப வார்த்தைகளைத் தவிர்த்து, அசுப எண்ணங்களைத் தவிர்த்து, அடுத்தவர்களுக்கு,



கெடுதல் நினைக்காத, நல்ல எண்ணங்களை வளர்த்து, அதே மாதிரி, அடுத்தவர்களுக்கு, ஆறுதல் சொல்லக்கூடிய, நல்ல விஷயங்களை நாம் வளர்த்து வைத்துக் கொண்டோம் என்றால், அதுதான் உண்மையான விரதமாக இருந்து கொண்டு இருக்கிறது.

அந்த விரதத்துக்கு, நாள், நட்சத்திரம், தேதி எதுவும் கிடையாது. எந்த நாளாக இருந்தாலும், எந்த நேரமாக இருந்தாலும், அடுத்தவர்களுக்கு, துரோகம் நினைக்காமல் இருந்தாலே, அடுத்தவர்களைக் கெடுக்க நினைக்காமல் இருந்தாலே, அடுத்தவர்களுக்கு, உதவி செய்ய முடியாவிட்டாலும், உபத்திரவம் செய்யாமல் இருந்தாலே, மிகப் பெரிய விரதமாக, சாஸ்திரத்தில சொல்லப்பட்டிருக்கிறது என்கிற விஷயத்தை, இந்த நேரத்தில், சங்கடமில்லாமல், சங்கோஜம் இல்லாமல், சந்தோஷத்தோடு தெரிவிக்க, கடமைப்பட்டு இருக்கிறேன். இப்போது அதையும் மீறி, இந்த மாதிரியான, நாம் கட்டுரையில் சொல்லக்கூடிய விரதத்தை எந்த நாளில் கடைப்பிடித்தால், நல்லது அப்படிங்கிற, ஒரு எண்ணம் இருக்கும் இல்லையா?

பொதுவாகவே, ஞாயிற்றுக்கிழமை நாட்களில், விரதம் இருக்கிறவர்கள், விரதம் அப்படிங்கிறது, நான் கட்டுரையில், முன்பே சொன்ன மாதிரி, அசுப வார்த்தைகளைப் பேசாமல், கெட்ட விஷயங்களை நினைக் காமல், அடுத்தவர்களுக்கு, துரோகம் நினைக்காமல் இருப்பது. அதே சமயத்தில், அந்த நாள், காலையில் நீங்கள் அன்றாடம் எழுந்திருக்கக்கூடிய நேரத்தில் எழுந்து, காலைக்கடன்களை முடித்துவிட்டு, குளித்துவிட்டு, காலையில் சாப்பிடுகிறோம், நேரத்துக்கு சாப்பிடுகிறோம் என்பதை விட, அதாவது, சிற்றுண்டி என்பதை ஏழரை மணி, எட்டு மணி என்று ஒரு கணக்கு இருந்தால் கூட, அந்த எட்டு மணிக்குள்ளே, ஏதாவது ஒரு தெய்வ ஸ்தலத்துல, நெய் விளக்கு ஏற்றி, உங்கள் பெயர், நட்சத்திரத்தில், அதாவது, உங்களுடைய பெயர், நாமாவழியில அர்ச்சனை பண்ணி, பிரார்த்தனை வேண்டுதல் வைத்துக் கொண்டபின், அது அப்புறம், காலை உணவு சாப்பிடுவது, ஒரு சிறந்த விஷயமாக, சாஸ்திரத்தில சொல்லப்பட்டு இருக்கிறது.

அந்த வகையில் ஞாயிற்றுக்கிழமை நாளில், இந்த மாதிரியான, விரதம் இருக்கக் கூடியவர்களுக்கு, எந்த மாதிரியான தோஷம் நிவர்த்தியாகும் என்று கேட்டால், ஞாயிற்றுக்கிழமை காலையில், இதே மாதிரி, நேரமே எழுந்து, சூரிய நமஸ்காரம் பண்ணி, ஏதாவது சிவன் கோயிலிலோ, அம்மன் கோயிலிலோ, ஒரு கோவிலில் போய், நெய் விளக்கு ஏற்றி, உங்களுடைய பெயரில், அர்ச்சனை பண்ணி விட்டு, அதற்கப்புறம், சாப்பிடக்கூடிய விஷயத்தை, வைத்துக் கொண்டீர்கள் என்றால்,அது, ஒரு விரதமாக எடுத்துக் கொள்ளும் பொழுது, ஞாயிற்றுக்கிழமை நாள், இருக்கக்கூடிய, விரதத்தின் மூலமாக, தோஷம், கொஞ்சம், கொஞ்சமாக நிவர்த்தி ஆகிறது, அப்படிங்கறது, சாஸ்திரம் சொன்ன, ஒரு முக்கியமான விஷயம். அதே மாதிரி, திங்கட்கிழமை நாளில், இருக்கக்கூடிய விரதத்துக்கு வந்து, பார்த்தீர்கள் என்றால் சோமவார விரதம், அப்படிங்கிற, ஒரு சிறப்பான பெயர், இருந்து கொண்டு இருக்கிறது. அந்த, சோம வார விரதத்தை தொடர்ந்து, நாம் கடைபிடிக்கும் பொழுது, சாபம் விலகக்கூடியது. பெண்களுடைய சாபம் விலகக்கூடியது.

அது பெண்களுடைய வாக்கு மூலமாக, பெண்களுடைய அனுகிரகத்தின் மூலமாக, பெண்கள் மூலமாக, உங்களுக்கு பெரிய உதவிகள் கிடைக்கக் கூடியது, நன்மைகள் கிடைக்கக் கூடியது. இந்த மாதிரி நல்ல விஷயங்கள் நடந்துகொண்டு இருக்கும்.

அதே மாதிரி, செவ்வாய்க் கிழமை என்றால், குஜன் என்று சொல்லக்கூடிய, செவ்வாய் பகவானுக்கு உகந்த நாளில், செவ்வாய்க்கிழமை நாட்களில், நாம் விரதம் இருக்கும் பொழுது, மங்களகரமான காரியங்களில் தடை இருக்கும் இல்லையா? தடைகளை நிவர்த்தி செய்வது,

ஓம் அச்சம் தவிர்ப்பவனே போற்றி,ஓம் ஆனை முகத்தோனே போற்றி, ஓம் ஆறுமுகன் சோதரணே போற்றி

அல்லது உங்களுடைய ஜாதகத்தில், செவ்வாய் தோஷம் என்பது, கடுமையாக இருந்தது என்றால், அந்த தோஷம், கொஞ்சம், கொஞ்சமாகக் குறைந்து, சந்தோஷம் என்பதன் அளவு, அதிகமாகக்கூடிய பாக்கியம், செவ்வாய்க்கிழமை, விரதத்துக்கு, இருந்து கொண்டு இருக்கிறது.

அதே மாதிரி, புதன்கிழமை ருக்கக்கூடிய விரதம் என்பதைப் பார்த்தால், அதாவது, மற்ற விரதம் எல்லாம் , பெரியவர்கள் இருப்பார்கள், திருமணமானவர்கள் இருப்பார்கள், சுமங்கலிப் பெண்கள் இருப்பார்கள்ன்னு கணக்கு இருக்கும். புதன்கிழமை நாளில் இருக்கக்கூடிய விரதம் மட்டும், சிறிய, ஐந்து வயதுக் குழந்தையில் இருந்து, எண்பத்தைந்து வயது பெரியவர்கள் வரைக்கும், விரதம் இருக்கக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

புதன்கிழமை இருக்கக்கூடிய, அந்த விரதத்தினால் உங்களுக்கு, கல்வி, ஞானம் கிடைக்கும், அல்லது கல்வியில் தடை விலக்கும். வெளிநாடு சம்பந்தப்பட்ட, விஷயங்களுக்கு, துணை செய்யக்கூடியது.

புதிய, புதிய வித்தைகளை, கற்றுக்கொள்ள உதவக் கூடியது. உங்களுக்கு , மிகப்பெரிய வருமானம் கொடுக்கக்கூடியது. இந்த மாதிரி நல்ல விஷயங்கள் நடந்துகொண்டு இருக்கும்.

அதே மாதிரி, வியாழக்கிழமை என்றால், அது குரு வாரமாக, குரு விரதமாக இருந்து கொண்டு இருக்கிறது. இந்த வியாழக்கிழமை நாளில் விரதம் இருந்தீர்கள் என்றால், அது ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், திருமண வயது வரும் பொழுது, காலா காலத்தில், கச்சிதமான, நிச்சயமான வரன் கிடைக்கக்கூடிய பாக்கியத்தை, கொடுக்கிறது. திருமணம் அமைகிறது, காலா காலத்தில் அமைகிறது, என்பதை விட, மறுமணம் இல்லாத, திருமண வாழ்வு அமையக்கூடிய பாக்கியத்தை, இந்த குருவார பிரார்த்தனை, கொடுத்துக் கொண்டு இருக்கிறது. குருவார விரதம் கொடுக்கிறது



என்பதை நாம் குதூகலமாகவே நம்பலாம். அதே மாதிரி, வெள்ளிக்கிழமை எல்லாம் இருக்கக் கூடிய விரதம். அதாவது, சுமங்கலி விரதம் என்று சொல்வார்கள். மகாலட்சுமி விரதம் என்றும் சொல்வார்கள். மிகப்பெரிய அமைப்புகள் நிறைந்த, அதிசயகரமான நாளாக வந்து, நாம் இந்த வெள்ளிக்கிழமையை சொல்லிக் கொண்டு இருப்போம். அந்த மாதிரியான வெள்ளிக்கிழமை நாளில், விரதம் என்றால், பெண்களுக்கு, அதாவது, சுமங்கலியாக, தீர்க்க சுமங்கலியாக இருக்கக்கூடிய, பாக்கியம் கிடைக்கிறது. கணவருக்கு இருக்கக்கூடிய, கண்டங்களில் இருந்து, காப்பாற்றக்கூடிய, தகுதி கிடைக்கிறது. இந்த மாதிரி, நல்ல, நல்ல விஷயங்கள், வெள்ளிக்கிழமை விரதத்துக்கு, இருந்து இருக்கிறது. அதே மாதிரி, சனிக்கிழமை பார்த்தீர்கள் என்றால், சனி வார விரதம் என்பது, பிணி போக்கக் கூடிய அற்புதமானது என்பதை, சாஸ்திரம் சொல்லி இருக்கிறது. பிணி என்கிற நோயாக இருந்தாலும், இந்த பிணி, பீடைகளை எல்லாம் தகர்த்தெறியக்கூடிய, இந்த பிணி, பீடைகளில் இருந்து, விரட்டி அடிக்கக்கூடிய, அற்புதமான விரதமா, சனிக்கிழமை இருக்கக்கூடிய விரதத்துக்கு இருந்துட்டு இருக்குது.

அதனால், வார நாட்களில், ஒவ்வொரு நாட்களும் இருக்கக்கூடிய, ஒவ்வொரு விரதத்திற்கும், பல்வேறு விதமான சிறப்புக்கள் இருந்து கொண்டு இருக்கிறது என்கிற விஷயத்தை, இந்தக் கட்டுரை மூலமாக தெரிந்து கொண்டீர்கள்.

எது, எப்படி இருந்தாலும், ஒரு மனிதனை, யார் கைவிட்டாலும், ஆன்மீகம் கைவிடாது என்கிற, என்னுடைய ஆழமான ஆன்மீகத்தை பதிவு செய்து, அகில உலகத்தில் உள்ள, அத்துணை தெய்வங்களின் அனுகிரகமும், ஈரேழு உலகத்தில் உள்ள, எல்லா சக்திகளின், ஒட்டுமொத்த ஆசீர்வாதங்களும், உலக மக்கள் அனைவருக்குமே கிடைக்க வேண்டிய பிரார்த்தனையோடும், வாழ்த்துக்களோடும்,

**S R J "ராஜயோகம்★"**

**Dr. K.ராம் Ph.D., (USA)**

உ

SRJ "ராஜயோகம்" Dr.K.Ram Ph.D (USA)

# S R J GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

**நீங்கள் எந்த தேதியில், ராசியில், நட்ஷத்திரத்தில், லக்கினத்தில் பிறந்தவராக இருந்தாலும்... ஏன்?**
**எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும்**

'நல்ல நேரமும்' நன்மையான காலமும்'ஜாதகத்தில் இருப்பது சத்தியமான உண்மை

உங்களுடைய ''ஜாதகம்'' ''கைரேகை'' ''பிறந்ததேதியை'' ஆய்வு செய்து பிரபஞ்சத்தில் உங்களுக்காக விதிக்கப்பட்டுள்ள ''யோக பலன்களையும்'' ''பாவ புண்ணியங்களையும்'' ''பரிகார நன்மைகளையும்'' உறுதியாக தெரிந்துகொண்டு ''எண்கணித சாஸ்திரம்'' ''வாஸ்து சாஸ்திரம்'' ''தெய்வ பிரசன்ன சாஸ்திரம்'' ''விருட்ஷ சாஸ்திரம்'' ''மச்ச சாஸ்திரம்'' ''மந்த்ர'' ''தந்த்ர' சாஸ்திரம் ''சாமுத்ரிகா சாஸ்திரம்'' ''பஞ்சபூத சாஸ்திரம்'' ''பரிகார சாஸ்திரம்'' ''அதிர்ஷ்டரத்தின சாஸ்திரம்'' மற்றும் ''அஸ்ட்ரோ பயோரித சாஸ்திர'' விதிகளின்படி

## ''திக்கற்ற யாவரும்'' ''ஒப்பற்ற பயன்பற''
## "ராஜயோகம்" Dr. K.ராம் Ph.D., (USA)

''அண்ட நிழலும் இல்லை'' ''ஆதரிப்பார் யாரும் இல்லை''
என்ற நிலையில் ஏக்கப்பட்டுக் கொண்டிருக்கும், மனித உள்ளங்களை ஊக்கப்படுத்தி உண்மையான வாழ்வியலில்
''அவமானப்பட்ட'' ஒவ்வொரு மனிதனுக்கும் வெகுமானம் உண்டு!
என்ற ஆன்மீக உண்மையை மதங்களைக் கடந்து உலக நாடுகளில் உறுதிப்படுத்தி,
''சர்வமத ஜோதிட மகிரிஷி'' என்று பாராட்டும் பெற்றதோடு,
சிங்கப்பூர், மலேசியா, ஶ்ரீலங்கா உட்பட ஆஸ்திரேலியாவில் ''சிட்னி முருகர் கோவில்'' மற்றும் ''ஏடிபிசி வானொலி''-யில் சிறப்பு ஆன்மீக நேரலை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மன், சுவிட்சர்லாந்து, கனடா, இங்கிலாந்து (லண்டன்) உட்பட மேலை நாடுகளில் உள்ள நோய்களின் இக்கட்டான கேள்விகளுக்கு, அப்பட்டமான ஆன்மீக விளக்கங்கள் கொடுத்து, வெளிநாட்டு மக்களாலும், பத்திரிகைகளாலும், பாராட்டுப் பெற்றதோடு, ஜோதிடம், ஆன்மீகம் உள்ளிட்ட துறைகளில் சிறந்த சேவைக்காக ''மனிதருள் மாணிக்கம்'' ''மகாத்மா காந்தி'' ''சாதனைச் சிகரம்'' ஆகிய விருதுகளும் பாராட்டுக்களும் பெற்றதோடு ''சாணத்திற்கும்'' ''மெஞ்ஞானத்திற்கும்'' உள்ள தாத்பர்யங்களை ''விஞ்ஞானத்தோடு'' விளக்கப்படுத்தி, ஆளுநர் அவர்களால் ''ஆன்மீகச் செம்மல்'' விருது பெற்ற



## SRJ "ராஜயோகம்"
## Dr. K.ராம் Ph.D., (USA)

**அவர்களை நேரில் சந்திக்க முன்பதிவிற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

SRJ "ராஜயோகம்" Dr.K.Ram Ph.D (USA)

# S R J GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

NO: 139, PANNA PLAZA, ARCOT ROAD, KODAMBAKKAM, CHENNAI - 600 024, TAMIL NADU, INDIA.

OFFICE : 044 - 24849187
MOBILE :
9940431377, 9677276129,
9952991118, 9840160068
EMAIL : srjgem@gmail.com
WEB : www.srjgemsastronumero.com, www.drkramsrj.com.

SINGAPORE / MALAYSIA :
No: 250, BRICK FIELDS,
LITTLE INDIA ,
KUALA LUMPUR - 50470.
MOBILE : +91 9952991118

SRILANKA :
NO: 81, 1/5 MAHA,
VIDIYALAYA MAWATHA,
COLOMBO - 13.
OFFICE : +94112448303
MOBILE : +94772254163
+91 9952991118

AUSTRALIA :
NO: 65, HOMEBUSH ROAD,
STRATHFIELD SYDNEY,
AUSTRALIA - 2135.
MOBILE : +91 9952991118

LONDON :
NO: 163, STAINES ROAD,
MIDDLE SEX TWS 3JZ,
UNITED KINGDOM.
MOBILE : +91 9952991118

# வாழ்வு வளம் பெற விநாயகர் வழிபாடு!


**ஸ்ரீ விநாயகர் வழிபாட்டில் இலைகளின் மூலம் வழிபாடு செய்வது விசேஷமானதாகக் கருதப்படுகிறது.**

மாசி, பருஹதி எனும் கிளா இலை, வில்வம், அருக்கு, ஊமத்தை, இலந்தை, நாயுருவி, துளசி, மாவிலை, தங்க அரளி, விஷ்ணு கிரந்தி, மாதுளை, மருவு, நொச்சி, ஜாதிக்காய் இலை, நாரிசங்கை, வன்னி, அரசு, நுணா, எருக்கு, தேவதாரு ஆகிய 21 இலைகள் கணபதி வழிபாட்டுக்கு மிகவும் உகந்தவை என்றாலும் நம் வீட்டுக்கு அருகே கிடைக்கும் இலைகளைக் கொண்டு, நாம் அர்ச்சித்தாலே போதுமானது.விநாயகரை வழிபட்டே அனைத்து காரியங்களையும் செய்ய வேண்டும். விநாயகரின் அருளைப் பெற 21 வகையான இலைகள் கொண்டு அர்ச்சித்து வணங்கினால் கோடி நன்மைகள் கிடைக்கும். அந்த வகையில் விநாயகரை எந்த இலை கொண்டு வழிபட்டால், என்ன பலன் கிடைக்கும் என விநாயகர் புராணம் கூறுகிறது.

ஒவ்வொரு இலைக்கும் ஒரு குறிப்பிட்ட பலன் உண்டு என்பதால் கிடைக்கும் இலைகளைக் கொண்டு 21 முறை கணபதியின் திருநாமங்களைச் சொல்லி சமர்ப்பிக்க வேண்டும். 21 மலர்கள், 21 இலைகள் கொண்டு



ஓம் ஈகை உருவே போற்றி, ஓம் உண்மை வடிவே போற்றி, ஓம் உலக நாயகனே போற்றி



அர்ச்சித்து வழிபடுவதைத் தொடர்ந்து 21 முறை தூர்வாயுக்ம சமர்ப்பணமும் செய்து வழிபட வேண்டியது அவசியம்.

அருகம்புல் வழிபாடு என்பது அல்லல்கள் தீர்க்கும் வழிபாடு. தூர்வா என்றால் அருகம்புல். யுக்மம் என்றால் இரட்டை என்று பொருள். பொதுவாக அர்ச்சனையின் போது நாம் அருகம்புல்லை சாத்துவது வழக்கம். விநாயகர் சதுர்த்தி அன்று அருகம்புல் கொண்டு அர்ச்சிப்பதன் மூலம் அற்புத பலன்களைப் பெறலாம்.

இரண்டு இரண்டாக அருகம்புற்களை எடுத்து கணநாதனின் நாமத்தைச் சொல்லி சாத்த வேண்டும். இதனால் நினைத்தது நிறைவேறும்.அருகம்புல் எவ்வளவு காலம் மழை இல்லாவிட்டாலும் காய்ந்து போய் காணப்படுமே தவிர அழிந்து போகாது. சிறிது மழை பெய்தால்கூட உடனே துளிர்விடும். அதுபோல் எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் சோர்ந்து போகாமல் நம்பிக்கையோடு இருக்க வேண்டும் என்று நம் முன்னோர்கள் அருகம்புல்லை உதாரணமாகச் சொல்லி வாழ்த்துவதைப் பார்க்கும்போதே அதன் மகத்துவம் நமக்குத் தெரியவரும். அருகம்புல்லுக்கு ஈடானது எதுவும் இல்லை. தன்னுடைய செல்வங்களுக்கு மேலானது அருகம்புல் என்று அந்த குபேரரே கூறியுள்ளார்.

பாற்கடலில் இருந்து எடுக்கப்பட்ட அமிர்தம் அருகம்புல்லின் மீது விழுந்ததால் அதற்கு அழிவென்பதே கிடையாது.

பூஜைக்கு உரிய இந்த புல்லிற்கு ஆகர்ஷண சக்தியை உறிஞ்சும் தன்மை உண்டு என்பது உண்மை. நல்ல சக்தியை தேக்கி வைத்து தீய சக்தியை விலக்கி வைக்கும் தன்மை கொண்டது அருகம்புல். யாஷினி தேவி என்ற தேவ மங்கை விநாயகரை திருமணம் செய்ய நினைத்து தவம் இருந்தாள். ஆனால் அதற்கு சம்மதிக்காத விநாயகர் அருகம்புல்லாக மாறி தனக்கு விருப்பமான பொருளாக தன்னுடனேயே இரு என்று வரமளித்தார் என்கிறது புராண கதை. பார்வதியும் சிவனும் தாயம் விளையாடிய போது நடுவராக இருந்த நந்தி சிவனுக்கு ஆதரவாக கூறியதால் கோபம் கொண்ட பார்வதி தேவி, நந்திக்கு சாபம் கொடுத்தார்.

பின்னர் அவரே சாப விமோசனமும் கொடுத்தார். கணேச சதுர்த்தியின் போது விநாயகருக்கு விருப்பமான பொருளை சமர்பித்தால் சாப விமோசனம் கிடைக்கும் என்று கூறவே அருகம்புல்லை படைத்து சாப விமோசனம் பெற்றாராம்.

கணபதிக்கு ஆள் உயர மாலை வேண்டாம். ஒரு கைப்பிடி அருகம்புல் போதும். அருகம்புல்லை பிள்ளையார் புல் என்று அழைப்பார்கள்.

வீடுகளில் அருகம்புல்லை சாணம் அல்லது மஞ்சளில் நட்டு வைத்து வணங்குவார்கள். கணபதியின் பூஜைக்கு உரியதானது அருகம்புல். தூர்வை, மேகாரி, பதம், மூதண்டம் என பல

**தீபாவளியின்போது பெரியோர்களை வணங்கி அவர்களிடம் ஆசியும், வாழ்த்தும் பெறுவது அவசியமாகும்!**



பெயர்களால் சிறப்பிக்கப்படும் அருகம்புல் கணநாதருக்கு மட்டும் அல்ல, மூலிகையாக எடுத்துக்கொண்டால் நமக்கும் நன்மை தரும். இதற்கு ஒரு புராண கதையே உள்ளது.

ஜ்வாலாசுரன் என்ற அனலன் வேண்டாத சேர்க்கையினால் தீயவனாகி சாபம் பெற்றான். இதனால் மூர்க்கனாக மாறி தேவர்களை இம்சித்து வந்தான். வரங்கள் பல பெற்றதாலும், பிறப்பிலேயே அவனது உடல் பெரும் அனலைக் கக்கியதால் அவனுக்கு அருகில் கூட யாரும் செல்ல முடியவில்லை. செல்பவர்களை எல்லாம் சாம்பலாக்கினான், ஜ்வாலாசுரன்.

என்ன செய்வது என்று புரியாத தேவர்கள் பிள்ளையாரை வேண்டி அவரது உதவியை நாடினர். கணநாதரும் அவனை ஒழித்து தேவர்களை காக்க அவனிருக்கும் இடம் சென்றார். அங்கு கணபதியின் கணங்கள் எல்லாம் வெம்மை தாங்காமல் ஓலமிட்டன. இதனால் கணபதியின் கோபம் எல்லை கடந்தது. ஜ்வாலாசுரனை பெரும் அனல் வடிவம் கொண்டு கணபதி தாக்கினார்.

அந்த அசுரன் ஓய்ந்துபோன தருணத்தில் அவனைப் பிடித்து விழுங்கி விட்டார் கணபதி. உஷ்ணம் தாங்காத கணநாதர் சக்தியை எண்ணி வணங்கினார்.

தேவர்கள் யாவரும் கணநாதரை குளிர்விக்கும் வகையில் என்ன என்னவோ செய்துபார்த்தார்கள். எதிலுமே தீ தணியவில்லை. சப்த ரிஷிகள் எனப்படும் அத்திரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கவுதமர், காஸ்யபர், ஆங்கிரஸர் ஆகிய எழுவரும் சேர்ந்து ஒரு சாண் அளவுள்ள இருபத்தொரு அருகம்புற்களைக் கொண்டு வந்து கணபதியின் தலையில் வைத்தனர். இதனால் கணபதியின் உடல் குளிர்ந்து, வயிற்றில் இருந்த அனல் தணிந்தது.

அருகம்புல்லினால் வெப்பம் தணிந்து குளிர்ந்த பிள்ளையார் மகிழ்ந்தார். அதுமுதல் தனக்கு பிடித்த அருகம்புல்லைக் கொண்டு யார் பூஜை செய்தாலும் அவர்களுக்கு வேண்டிய வரம் தருவேன் என்று கூறினாராம் பிள்ளையார்.

ஜோதிட சாஸ்திரப்படி விநாயகர் கேதுவின் அம்சம். கேதுவால்

ஓம் ஊறும் களிப்பே போற்றி, ஓம் ஊழ்வினை அறுப்பவனே போற்றி, ஓம் எளியவனே போற்றி

"வாழ்வில் தொடர்ந்து பிரச்னைகள், தொல்லைகள், கடன், வறுமை, ஆகியவற்றால் துன்புறுபவர்கள் விநாயகப்பெருமானுக்கு அருகம்புல் சாத்தி வழிபட அவை படிப்படியாகக் குறையும்."



ஏற்படும் களத்திர தோஷம், மாங்கல்ய தோஷம், புத்திர தோஷம் ஆகியவற்றை நிவர்த்தி செய்யக்கூடியவர். சந்திரனால் ஏற்படக்கூடிய தடைகள், தோஷங்களை போக்கக் கூடியவர்.

சந்திர திசை, கேது திசை நடப்பவர்கள் மாதந்தோறும் வரும் சங்கடஹர சதுர்த்தியிலும், விநாயகர் சதுர்த்தியிலும் தூர்வாஷ்டமியிலும் பிள்ளையாரை அருகம்புல் சாற்றி வழிபட்டால் அனைத்துவிதமான தோஷங்களும் விலகும். புல் வகை தாவரங்களுக்கு அதிபதி கேது பகவான் என்கிறது ஜோதிட சாஸ்திரம். ஒருவரது ஜாதகத்தில் லக்னத்தில் கேது இருந்துவிட்டாலோ அல்லது சந்திரன் கேதுவுடன் சேர்ந்து நின்றுவிட்டாலும் மற்றும் கேதுவின் அஸ்வினி, மகம் மற்றும் மூலம் நக்ஷத்திர பாதங்களில் பிறந்துவிட்டாலும் அவர்களுக்கு ஞாபக மறதியோடு குழப்பமும் ஒருவித பய உணர்வும் எப்போதும் இருக்கும்.

அத்தகைய அமைப்பினர் விநாயகரை அருகம்புல் கொண்டு கேதுவின் நாட்களான அஸ்வினி, மகம் மற்றும் மூலம் ஆகிய நாட்களில் வணங்கிவர குழப்பங்களும் பய உணர்வும் நீங்கும்.

ஞாபக மறதியைப் போக்கினால் மனிதனின் அன்றாட வாழ்வில் மன உளைச்சல், மன இறுக்கம் நீங்கும். ஞாபக சக்தியைத் தூண்ட அருகு சிறந்த மருந்தாகும். அருகம்புல்லை நிழலில் உலர்த்தி பொடி செய்து தினமும் கஷாயம் செய்து குடித்து வந்தால் நினைவாற்றல் அதிகரிக்கும். தான் என்ற அகங்காரம் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே எளிமையான அருகம்புல்லை விரும்பி ஏற்கிறார் விநாயகர். மனம், வாக்கு, உடல் மூன்றையும் கூர்மைப்படுத்தி இறையருளைப் பெற வேண்டும் என்பதைக் காட்டவே அருகம்புல் ஒரே காம்பில் மூன்று முனைகளைக் கொண்டதாக இருக்கிறது. அதே போல அர்க்க புஷ்பம் என சமஸ்கிருதத்தில் அழைக்கப்படும் எருக்கம் பூ விநாயகரை அர்ச்சிக்க உகந்த மலர்.

சூரியனுக்கு அர்க்கன் என்று பெயருண்டு. சூரியனுக்கு உகந்த எருக்கம் பூவை விநாயகருக்கு அணிவித்து வணங்கும்போது விக்னங்கள் நீங்குவதுடன் சூரியனின் அருளால் ஆத்ம பலமும், ஆரோக்கியமும் உண்டாகும். அதோடு விநாயகரின் அருளாசி கிடைக்கும். வாழ்வில் தொடர்ந்து பிரச்னைகள், தொல்லைகள், கடன், வறுமை, ஆகியவற்றால் துன்புறுபவர்கள் விநாயகப்பெருமானுக்கு அருகம்புல் சாத்தி வழிபட அவை படிப்படியாகக் குறையும்.

பொதுவாகவே அருகம்புல் மிகவும் குளுமையானது என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட குளுமையான அருகம்புல்லை விநாயகப்பெருமானுக்கு சாத்தி வணங்குவதன் மூலம் மன அமைதி கிடைக்கும்.

– சிவசௌந்தர்

ஓம் எந்தையே போற்றி, ஓம் எங்குமிருப்பவனே போற்றி, ஓம் எருக்கு அணிந்தவனே போற்றி

# திருமண வரம் அருள்வார் மணக்குள விநாயகர்






**விநாயகரின் சிறப்புமிக்க ஆலயங்களில் புதுச்சேரியில் உள்ள மணக்குள விநாயகருக்கு தனி இடம் உண்டு. இந்தியாவிலேயே தங்கத்தால் ஆன மூலஸ்தான கோபுரம் இங்குதான் இருக்கிறது. இந்த ஆலயத்தில் காணப்படும் மேலும் பல சிறப்புகளைப் பற்றி அறிந்துகொள்வோம்.**

8 ஆயிரம் சதுர அடி பரப்பில் இந்த ஆலயம் அமைந்திருக்கிறது. இத்தல மூலவர் இருக்கும் இடம் ஒரு கிணறு ஆகும். பீடத்தின் இடதுபக்கம் மூல வருக்கு அருகிலேயே ஒரு சிறிய குழி காணப்படும். இதன் ஆழம் இதுவரை கண்டறியப்படவில்லை. மேலும் இதில் எப்போதும் நீர் இருந்துகொண்டே இருக்கும்.

புதுச்சேரியில் மகாகவி பாரதியார் தங்கியிருந்த 10 ஆண்டுகளில், இந்த விநாயகப் பெருமானைப் போன்றி 40 பாடல்களைப் பாடியிருக்கிறார். இவை `நான்மணிமாலை' என்று வழங்கப்படுகிறது. பிரம்மச்சாரியாகவே கருதப்படும் விநாயகருக்கு, இந்த ஆலயத்தில் திருக்கல்யாணம் நடைபெறுவது மற்றொரு சிறப்பாகும். ஏனெனில் இங்கு விநாயகர், சித்தி புத்தி என்ற இரண்டு மனைவி யருடன் காட்சியளிக்கிறார்.

டச்சுக்காரர்கள், போர்ச்சுகீசியர்கள், டேனீஷ் காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் என 5 வெளிநாட்டவர்களின் ஆட்சிகளிலும் சிறப்புற்று விளங்கியவர், இந்த மணக்குள விநாயகர். மணக்குள விநாயகர் கோவிலில் ஆவணி மாதம் நடைபெறும் பிரம்மோற்சவத்தின் போது, அனைத்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், சுவாமி வாகனத்திற்கான ஏற்பாடுகளைச் செய் கிறார்கள். கிழக்கு நோக்கி வீற்றிருந்து அருளாசி வழங்கும் இந்த விநாயகர், இடம்புரி விநாயகராக அருள்கிறார். இத்தலத்தில் மாதம் தோறும் சங்கடஹர சதுர்த்தி தினத்தன்று 4 கால அபிஷேகங்களுடன் சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

அன்று பூஜையில் பங்கேற்றால் மிகுந்த பலன் கிடைக்கும். ஒவ்வொரு மாதமும் வரும் சதுர்த்தி அன்று பிள்ளையாரை வேண்டி, அன்று முழுவதும் உப வாசம் இருந்து மாலையில் கொழுக்கட்டை படையலிட்டு விரதத்தை முடித்தால் எல்லாத் தடைகளும் நிவர்த்தி யடைந்து திருமணம் நடைபெறும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. தங்கத்தகடு போர்த்தப்பட்ட கொடிக்கம்பத்தின் உயரம் 18 அடி. இந்த ஆலயத்தில் காணாபத்திய ஆகம விதிப்படி வழிபாடுகள் நடைபெறுகின்றன.

விநாயகருக்கு இத்தலத்து பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடன்களாக எண்ணெய், பஞ்சாமிர்தம், பழ வகைகள், தேன், பால், தயிர், இளநீர்,

**ஓம் ஏழை பங்காளனே போற்றி, ஓம் ஏற்றம் அளிப்பவனே போற்றி, ஓம் ஐயனே போற்றி**

புதுச்சேரியில் மகாகவி பாரதியார் தங்கியிருந்த 10 ஆண்டுகளில், இந்த விநாயகப் பெருமானைப் போன்றி 40 பாடல்களைப் பாடியிருக்கிறார். இவை `நான்மணிமாலை' என்று வழங்கப்படுகிறது.



விபூதி, சந்தனம் ஆகியவற்றால் அபிஷேகம் செய்கிறார்கள். மேலும் சொர்ணாபிஷேகம், 108 கலசாபிஷேகம், சங்காபிஷேகம் ஆகியவற்றையும் செய்கிறார்கள். வருடத்தின் மிக முக்கிய விசேஷ நாட்களான தமிழ் புத்தாண்டு தினம், தீபாவளி, பொங்கல் ஆகிய தினங்களிலும் கோவிலில் மூலவருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. திருமண வரம், குழந்தை வரம் உள்ளிட்ட அனைத்துவிதமான வழிபாடுகளும் இங்கே நடத்தப்படுகிறது. புதிதாக தொழில் தொடங்குவோர், வாகன வழிபாட்டுக்காக இங்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை ஏராளம்.

– பழனி

---


அருள் ராஜயோகம், ஆன்மீகம் ஜோதிட மருத்துவ மாத இதழ்
புது எண் 139, பழைய 7, பண்ணா பிளசா, ஆற்காடு ரோடு
கோடம்பாக்கம், சென்னை–600 024

அன்புடையீர்,

அருள் ராஜயோகம் மாதஇதழுக்கு ஆயுள் சந்தா ரூ. 5000/– செலுத்த விரும்புகிறேன். மாதா மாதம் இதழ்களை அனுப்பி வைக்கவும். நன்றி!

பெயர் ; ____________________

முகவரி ; ____________________

____________________

____________________

பணம் செலுத்தும் விவரம் (டிக் செய்து விபரங்களை குறிப்பிடவும்)

☐ பணவிடை ____________ ☐ காசோலை ____________

☐ கேட்போலை ____________ ☐ ரொக்கம் ____________

**சந்தாப் படிவம்**

சந்தாதாரர் கையொப்பம்


ஓம் ஐங்கரனே போற்றி, ஓம் ஒப்பிலாதவனே போற்றி, ஓம் ஒதுக்க முடியாதவனே போற்றி

# கணக்கு சொன்ன பிள்ளையார்!

கணக்கு சொன்ன பிள்ளையார் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயத்தின் அருகே ஒன்றரை கிலோமீட்டர் தொலைவில் கனக விநாயகர் அமைந்துள்ளார். ராஜேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரத்தை நிர்மாணித்தபின், தன் தந்தை ராஜராஜ சோழன் கட்டிய மிகப்பெரிய தஞ்சை பெருவுடையார் கோவில்போல தானும் கட்டவேண்டுமென தீர்மானித்து அதற்கான திருப்பணிகளைத் துவக்கினான். அப்போது அனுதினமும் வழிபட அரண்மனைக்குமுன் இந்த கனக விநாயகர் கோவிலை அமைத்து, கோவிலுக்கு வடகிழக்கே பிரகதீஸ்வரர் கோவில் அமைக்கும் பணியை தன் அமைச்சரிடம் ஒப்படைத்தான்.



திருப்பணிகளுக்குத் தேவையான பொன் பொருட்களை அரண்மனைக் கணக்கர் தினமும் அமைச்சரிடம் தருவார். அவற்றை அமைச்சர் இந்த கனக விநாயகர் திருமுன்வைத்து வணங்கியபின்பே ஆலயத் திருப்பணிகளை ஆரம்பிப்பார். (இந்த விநாயகருக்கு பால், எண்ணெய் அபிஷேகம் செய்யும்போது இவர் பச்சைநிற மேனியராகக் காட்சிதருவார்.) இப்படியே இடைவிடாமல் 16 ஆண்டுகள் அமைச்சர் தலைமையில் திருப்பணிகள் மும்முரமாக நடைபெற்றுவந்தன.

ஒரு நாள் ஆலயத் திருப் பணிகளைப் பார்வை யிட மன்னன் வந்தான். ஆலயம் கம்பீரமாக எழும்பிக் கொண்டிருப்பது கண்டு பரவசமடைந்தான். பின் அமைச்சரிடம், ""திருப்பணிக்கான செலவுக்குரிய கணக்கை நாளைக் காலை தெரிவியுங்கள்" என கட்டளை இட்டுவிட்டுச் சென்றான் மன்னன்.அமைச்சருக்குத் தூக்கிவாரிப் போட்டது. திருப்பணி செய்யும் மும்முரத்தில் அவர் கணக்கு ஏதும் எழுதவில்லை. அமைச்சருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தெய்வம்தான் தம்மைக் காக்க வேண்டுமென்று கனக விநாயகர் சந்நிதிக்கு ஓடோடி வந்தார். ""பெருமானே, மன்னர்திடீரென கணக்குக் கேட்கிறார். நான் என்ன செய்வேன்? தாங்கள்தான் இதற்கு வழிகாட்டவேண்டும்" என கண்ணீர்மல்கி மனமுருகப் பிரார்த்தனை செய்துவிட்டு இல்லம் சென்றார்.

அன்றிரவு அமைச்சர் கனவில் தோன்றிய கனக விநாயகர், ""அமைச்சரே, வருந்தாதீர். இதுவரை எத்து நூல் எட்டு லட்சம் பொன் செலவானது என மன்னரிடம் கூறுங்கள்" என அருளி மறைந்தார். கண்விழித்த அமைச்சர் கனக விநாயகர் சந்நிதி நோக்கி கைகூப்பி வணங்கினார். உடனே

**க**ங்கை கொண்ட சோழபுரம், பிரகதீஸ்வரர் கோயில் அருகில், "ஸ்ரீ கனக விநாயகர்' என்னும் "கணக்கு விநாயகர்' ஆலயம் அமைந்துள்ளது. இவர் அபூர்வமான பச்சைக் கல்லால் ஆன மரகத விநாயகர். இவருக்கு அபிஷேகம் செய்யும்போது தண்ணீர், பால், எண்ணெய் போன்றவை பச்சை நிறமாக மாறிவிடுவது அதிசயம்!



ஓலைச் சுவடியை எடுத்து அதில் "எத்து நூல் எட்டு லட்சம் பொன்' என்று எழுதி வைத்துவிட்டார்.

மரவேலை, சுவர் வேலை செய்யும்போது வளைவு வராமல் இருப்பதற்காக பயன்படுத்தும் நூலை எத்து நூல் என்பர். இதைக்கொண்டே கட்டுமானத்திற்குப் பயன்படுத்தும் கல், மரம், மணல் எவ்வளவு வாங்கப்பட்டது என கணக்கிட்டுவிடலாம். எத்து நூல்தான் முக்கிய இடம் வகிக்கிறது.

மறுநாள் அமைச்சர் மன்னரிடம் விநாயகர் கனவில் சொன்னபடி கூறினார். “”இவ்வளவு செலவானதென்றால் நாம் நினைத்தபடியே கோவில் சிறந்த முறையில்தான் உருவாகிவருகிறது. மகிழ்ச்சி! அமைச்சரே, எப்படி நீங்கள் இவ்வளவு துல்லியமாகக் கணக்கிட்டீர்கள்" என்று கேட்டான் மன்னன்.

நடந்த உண்மைகளை அமைச்சர் அப்படியே கூறிவிட்டார். ஆச்சரியமடைந்த மன்னன் கனக விநாயகர் சந்நிதிமுன் நின்று கண்ணீர் மல்க வணங்கினான். “”விநாயகப் பெருமானே தெரிவித்த கணக்கானதால் அது சரியாகத்தான் இருக்கும். இதன்மூலம் பிரகதீஸ்வரர் ஆலயம் எழும்ப விநாயகரே ஆசி வழங்கவிட்டார். எனவே இந்த கனக விநாயகர் இனிமேல் நமக்குக் கணக்குப் பிள்ளையார் ஆகிவிட்டார்" என பெருமிதத்துடன் கூறினான்.

இந்த விநாயகரை பிற்காலத்தில் எவரேனும் வேறிடத்திற்கு மாற்றிவிடக்கூடாதென்று எண்ணி, 4 அடி உயரம், 3 அடி அகலமுடைய இவரின் சந்நிதிமுன் மிகச்சிறிய நுழைவாயிலைக் கட்டிவிட்டான். அந்நியர் படையெடுப்பு வந்தபோது, பிரகதீஸ்வரர் ஆலயத்திற்கும் இந்த கனக விநாயகர் ஆலயத்திற்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இதற்கு இந்த கனக விநாயகரின் அருள்தான் காரணம். கங்கைகொண்ட சோழபுர பிரகதீஸ்வரர் ஆலய கோபுரத்தை யுனெஸ்கோ அமைப்பு உலக கலாச்சார சின்னமாக அறிவித்துள்ளது. 1,000 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டாலும் இவ்வால யம் புதுப்பொலிவுடன் திகழ்கிறது.

– மகாராஜா

**ஓம் கரணத்தில் மகிழ்பவனே போற்றி, ஓம் கணேசனே போற்றி, ஓம் விக்னராஜ கணபதி போற்றி,**

# பிள்ளையார் சதுர்த்தி வழிபாடு!

விநாயகருக்கு மோதகம், கரும்பு, அவல், பொரி ஆகியவற்றைப் படைக்க வேண்டும். இந்த நிவேதனப்பொருட்களுக்குள் பெரும் தத்துவம் அடங்கிக் கிடக்கிறது. அது என்ன என்பதைத் தெரிந்து படைத்தால் வாழ்க்கையே வளமாகும்.

**மோதகம்:** இதன் வெளிப்பகுதி வெள்ளையாகவும், உள்ளே மஞ்சள் நிற இனிப்பு பூரணமும் இருக்கிறது. மனதை வெள்ளையாக வைத்துக் கொண்டால், கண்ணுக்குத் தெரியாத இறைவனை அடையலாம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் படைக்கப்படுகிறது.

கரும்பு: கடிப்பதற்கு கடினமானாலும் இனிப்பானது. வாழ்க்கையும் இப்படித்தான். கஷ்டப்பட்டால் இனிமையைக் காணலாம் என்ற தத்துவத்தின் படி படைக்கப்படுகிறது.

அவல்,பொரி: ஊதினாலே பறக்கக் கூடியவை இப்பொருள்கள். வாழ்க்கையில் நாம் சந்திக்கின்ற துன்பங்களை ஊதித்தள்ளி விட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

நாயகர் சதுர்த்தியன்று விநாயகர் அகவல், விநாயகர் கவசம், காரிய சித்திமாலை பாடல்களைப் பாடி அவரை வழிபடலாம். கேட்ட வரம் தரும் தனிச்சிறப்புடைய இத்துதியை விநாயகர் முன்பு அமர்ந்து உள்ளம் ஒன்றிப் பாராயணம் செய்பவர்களின் மனவிருப்பம் எளிதில் நிறைவேறும். சிறப்பு மிக்க இத்துதியை மூன்று வேளைகளிலும் (காலை, மதியம், மாலை) உரைப்பவர்கள் நினைத்த காரியங்கள் கைகூடும். அனைத்து வகைகளிலும் வெற்றி உண்டாகும்.

விநாயகர் சதுர்த்திநாளில் வழிபாட்டிற்கு மண்ணால் அமைத்த விநாயகரையே வழிபாடு செய்ய வேண்டும். பூஜித்த பின் இவ்விநாயகரை ஆறு, குளம், ஏரிகளில் கரைத்துவிடலாம். மண்ணில் பிறக்கும் நீ இந்த மண்ணுக்கே சொந்தமாவாய் என்பது இதன் தாத்பர்யம்.



## மோதகம் மற்றும் கரும்பு படைக்கப்படுவதின் தத்துவங்கள்!



ஓம் கணநாயகனே போற்றி, ஓம் கண்ணிற்படுபவனே போற்றி, ஓம் கற்பகத்தருவே போற்றி

உங்கள் ஆதித்யா TV யில்



★ 27 நட்சத்திரங்களை உள்ளடக்கிய 12 ராசிகளில் உங்கள் ராசிக்கான தின பலன்

★ வழிபட வேண்டிய தெய்வம்

★ ஆன்மீக தகவல்

# யோகம் ராஜயோகம் நிகழ்ச்சியில்

## தினந்தோறும் காலை 7.00 மணிக்கு காணத்தவறாதீர்கள்

# ராஜயோகம்

# ஆன்மீக அறக்கட்டளை...!

(GOVT REGD : 58/99 - 22 23)



கல்வி, மருத்துவம்,
கலாச்சரம், பண்பாடு,
உணவு, விளையாட்டு,
ஒழுக்கம் சார்ந்த
உதவிகள் மற்றும்
இந்துமத சாஸ்திர,
சம்பிரதாய ஆன்மீக
விழிப்புணர்வு
வழங்குதல்.

உதவும் உள்ளங்கள்
தொடர்பு கொள்ள
814 814 88 44 /
814 814 82 92
website:
www.rajayogamtrust.com

# ராஜயோகம் நிகழ்ச்சிகள்









# குலதெய்வ விருட்ஷம்

ஒன்பது கிரகங்கள், 12 ராசிகள்,
12 லக்கினங்கள், 15 திதிகள்,
27 நட்ஷத்திரங்கள், 27 பட்ஷிகள்,
27 விருட்ஷங்களுக்கான
சூட்சுமக் குறியிடுகளோடு
தெய்வப்பிரசன்ன
சாஸ்திரப்படி உருவாக்கப்பட்ட
"குலதெய்வ விருட்ஷம் "



"ராஜயோகம்"
Dr. K.ராம் Ph.D., (USA)




( height : 15 cms
width : 17 cms
weight : 489g )

குடும்ப ஒற்றுமை,
குபேர சம்பத்து,
காரிய வெற்றி, சத்ரு ஜெயம்,
நோய், கடன்,
திருமண தடைகள் விலகி,
பதினாறு செல்வங்கள்
கிடைப்பதற்க்காக
48 வகையான பூஜைகளால்
பூஜிக்கப்பட்ட ...

## "குலதெய்வ விருட்ஷம்"

## இது பொருள் அல்ல
## "குலதெய்வ அருள்"

**Order Now**
**99404 31377 / 99529 91118**
**website: www.kuladeivavirutcham.com**



# வேலை வாய்பை அருளும் விநாயகர் வழிபாடு !


எல்லோருக்கும் ஆசைப்பட்ட வேலை கிடைப்பது கிடையாது. மனதிற்குப் பிடித்த வேலையைச் செய்யும் போது தான் அந்த வேலையின் சுமை நமக்குத் தெரியாமல் இருக்கும். நாம் இஷ்டப்பட்டுச் செய்யும் எந்த வேலையாக இருந்தாலும் அது நல்ல முன்னேற்றம் அடையும். நமக்குப் பிடித்த வேலை கிடைக்க விநாயகருக்கு சில பரிகாரங்கள் செய்தால் அது முழுமையாகும் எனக் கூறப்படுகிறது. அது குறித்து இங்கே காண்போம்.

பரிகாரங்கள்

விநாயகருக்கு கற்பூரவள்ளி இலையின் மீது பிரியம் உண்டு. அந்த கற்பூரவள்ளி இலையில் விநாயகரின் உருவம் இருப்பதாக நம்பப்படுகிறது. ஒன்பது கற்பூரவள்ளி இலைகளை மாலையாகத் தொடுத்து விநாயகருக்குச் சாற்றி வாரந்தோறும் புதன்கிழமையில் வழிபட்டு வந்தால் ஆசைப்பட்ட வேலை கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. குறிப்பாகப் புதன்கிழமை வழிபடுவது மேலும் சிறப்பாகும்.

கற்பூரவள்ளி இலைகளுக்குப் பதிலாக செவ்வாழைப்பழங்களை ஒன்பது மாலையாகக் கோர்த்து 12 வாரங்கள் விநாயகருக்குச் சாற்றி வழிபட்டு வந்தால் நினைத்த காரியம் நிறைவேறும் எனக் கூறப்படுகிறது. கற்பூரவள்ளி இலைகளை விடச் செவ்வாழை மாலைக்கு அதீத சக்தி உள்ளதாகக் கூறப்படுகிறது. ஒன்பது செவ்வாழைப்பழங்களையும் இடைவெளி விட்டு மாலையாகக் கட்டிக் கொள்ள வேண்டும்.

அந்த மாலையை விநாயகருக்கு வாரம் தோறும் புதன்கிழமை அன்று சாற்றி வழிபாடு செய்ய வேண்டும். பின்னர் தொடர்ந்து இதுபோல் 12 வாரங்கள் வழிபாடு செய்து விட்டு சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம் படைத்து நமது வழிபாட்டை முடித்துக் கொள்ளலாம்.இதுபோல தொடர்ந்து 12 வாரங்கள் தவறாமல் செய்து வழிபட்டு வந்தால் நினைத்த வேலை கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. வாரந்தோறும் விரதம் இருந்து வழிபாடு செய்பவர்கள் அசைவ உணவு எடுத்துக் கொள்ளாமல் விநாயக பெருமானை முழுமனதாக ஏற்று இந்த பரிகாரத்தைச் செய்ய வேண்டும். இந்த செவ்வாழை பழ மாலையைச் சாற்றி வழிபாடு



செய்யும்பொழுது முழு மனதோடு வேண்டிக் கொண்டு பிரார்த்தனை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இஷ்டப்பட்ட வேலை கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

– வினோத்

ஓம் கந்தனுக்கு தவியவனே போற்றி, ஓம் கிருபாநிதியே போற்றி, ஓம் கீர்த்தி அளிப்பவனே போற்றி

# ஆகஸ்ட் 2025 - ராசி



## மேஷம்

அன்பும், அரவணைப்பும் அதிகாரமும் அமையப் பெற்ற மேஷ ராசி பாக்கியவான் களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்..

விடாமுயற்சியால் வெற்றி பெறுவீர்கள். முனைந்து செயல்பட்டு முன்னேற்றம் காண வேண்டும். அவ்வப்போது மனதளவில் தளர்ச்சி ஏற்பட்டாலும், மனைவியின் ஆறுதலால் மன மகிழ்ச்சி உண்டு. துயரங்களை சந்திக்கும் நீங்கள் மாத இறுதியில் உயரங்களை தொட முடியும். எதிர்வரும் பிரச்சனைகளும் மறைந்தோடும். வீட்டில் நிம்மதி நிலவும். இதய சுமைகள் குறைய சமயபுர மாரியம்மன் வழிபாடு அவசியம்.



## ரிஷபம்

சிரித்த முகமும், சீரான தோற்றமும் இயல்பாக அமையப்பெற்ற ரிஷப ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!

சாதகமான கிரகங்கள் பாதகம் இல்லாமல் சஞ் சரிப்பதால் மாதம் முழுவதும் மகத்தான நன்மை உண்டு. மாதப் பிற்பகுதியில் ஆதித்ய பகவானும் அடுத்தடுத்த நன்மை செய்வார். பொருள் வரவு கூடி புதிய திருப்பங்கள் ஏற்படும். எதிர்ப்பார்த்த ஏற்றங்களும், எதிர்ப்பாராத லாபங்களும் இல்லம் தேடிவரும். செய்த்தொழிலில் உயர்வும், சேய் மனதில் நிறைவும் ஏற்படும். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். ஆஞ்சநேய வழிபாடு நல்வழி பயக்கும்!



## மிதுனம்

உதவும் குணமும், உழைப்பில் கவனமும் மிகுந்த மிதுன ராசி பாக்கியவான் களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!

ஆதித்ய சஞ்சாரம் காரியத்தில் வெற்றி தரும். வேதனைகள் மறைந்து சாதனைகள் ஓங்கும். சாமர்த்திய செயல்களால் சகாப்தம் படைத்திடலாம். தரித்திர நிலை மாறி சரித்திரம் படைத்திடுவீர்கள். விவேகமான செயல்பாட்டால் விடியல் ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு ஏற்படும். புதிய தொழில்கள் துவங்கும் முன் ஒன்றிற்கு பலமுறை யோசித்த பிறகு துவங்கவும்.

ஓம் குட்டில் மகிழ்பவனே போற்றி, ஓம் குறைகள் தீர்ப்பவனே போற்றி, ஓம் குணநிதியே போற்றி



## கடகம்

**தொட்ட காரியங்களில் வெற்றி பெறும் கடக ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனு கிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

செளிணியும் செயல்களில் சிறப்புக்கள் கூடும். எந்த ஒரு வேலையையும் மிகவும் பொறுமையாகவும், பொறுப்புடனும் செய்து முடிப்பீர்கள். சொல்லும் வார்த்தைகள் எதிரிகள் விலகிச் செல்லும் விதமாக அமையும். சாதகமான நிலையில் கிரகங்கள் இருப்பதால் சாதுர்யமாகச் செயல்படுவீர்கள். திட்டமாகச் செயல்பட்டு நட்டமில்லாமல் வாழ்வீர்கள். ஆசைப்பட்ட பணவரவை அதிர்ஷ்டமாக பெற்றிடுவீர். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். குலதெய்வ அனுகிரஹம் உண்டு.



## சிம்மம்

**அஞ்சா நெஞ்சமும், ஆளுமை குணமும் இயல்பாகவே அமையப் பெற்ற சிம்ம ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

வரவுகளும், செலவுகளும் சமமாக இருக்கும். சுக்கிரனும், செவ்வாயும் சாதகமான சஞ்சாரத்தில் இருப்பதால், பெண்களால் நன்மையும், பெரிய அளவிலான உதவியும் கிட்டும். சூரியனின் சஞ்சாரம் சுமாராக இருப்பதால் பணிவாகச் செயல்பட்டால் பல விதத்தில் நன்மை உண்டு. வெளியூர் பயணம் மேற்கொள்ளும் முன் குல தெய்வத்தை வணங்கி ஆசிபெற்ற பின்பு செல்லவும். பயண சமயத்தில் காயத்ரி மந்திரம் ஜெபிக்கவும்.

## கன்னி

**கனிவான பேச்சும், துணிவான செயலும் இயல்பாகவே அமையப்பெற்ற கன்னி ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

பிரார்த்தனை கை கொடுக்கும், பிரதான இலட்சியம் நிறைவேறும். திட்டங்கள் பல தீட்டி மதி நுட்பமாகச் செயல்படுவீர்கள். ஏற்றுமதித் தொழில் யாவும், ஏற்றங்களை அள்ளிக் கொடுத்து மாற்றங்களை செய்ய வைத்து மரியாதை ஏற்படுத்தும். மன உளைச்சல் இருந்தாலும், பணவரவு உண்டு. சொந்த ஊருக்குச் சென்று முன்னோர்களை வழிபடுவது அமைதியையும், அன்பையும் பெருக்கும்.



ஓம் குற்றம் பொறுப்போனே போற்றி, ஓம் கூவிட வருவோய் போற்றி, ஓம் கூத்தன் மகனே போற்றி


# ஆகஸ்ட் 2025 - ராசி பலன்கள்



## துலாம்

உண்மையோடு செயல்பட்டு உயர்வுகளை அடைய விரும்பும் துலா ராசி பாக்கியவான் களுக்கு நவகிரஹ, அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!

செயல்கள் திருப்திகரமாக நடக்கும். தொழில் தொடர்பான விஷயங்கள் அனுகூலமாக நடக்கும். புதிய முயற்சிகள் கைகூடும். லாபம் அதிகரிக்கும். நீண்ட நாள் மனக்கவலை போக்க அனுமன் மந்திரம் கூறி வரவும். அருகிலுள்ள அம்மன் கோயிலுக்கு முடிந்தபோது சென்று வரவும். நவகோள்களின் சஞ்சாரம் நன்மையான இடங்களில் சஞ்சரிப்பதால் உண்மையான உழைப்பிற்கு உன்னதமான பலன் கிட்டும். எண்ணிய எண்ணங்கள் யாவும் வண்ணமயமாய் நிறைவேறும்.



## விருச்சிகம்

புத்தி சாதுர்யத்தால் புகழ்நிறைந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் பக்குவம் பெற்ற விருச்சிக ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!

எந்த ஒரு விஷயத்திலும் அவசரம் காட்டினாலும் அதே நேரத்தில் அதில் உள்ள நன்மை தீமைகள் ஆராய்ந்து ஆலோசித்து முடிவு எடுப்பது நன்மை அளிக்கும். வீடு மனை வாகனம் சம்பந்தமான காரியங்களில் எதிர்பார்த்த பலன்கள் கிட்டும். துயரங்களை துரத்தியடித்து உயரங்களை அடைந்திடுவீர்கள். தக்க சமயத்தில் உதவிகள் கிடைத்து, நல்ல பலன்களை நாளும் பெறுவீர்கள். பழைய சொத்துக்களை விற்பதன் மூலம் பாதுகாப்பான வாழ்வை அமைத்துக் கொள்வீர்கள்.

## தனுசு



தனித்தன்மையோடு செயல்பட்டு, தனபாக்கியங்களை சேர்த்துக் கொள்ளும் அமைப்புகள் அதிகம் பெற்ற தனுசு ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ, அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!

பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆனாலும் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. எண்ணம் போல் செயல்பட்டு ஏற்றம் பல காண்பீர்கள். ஆதித்ய பகவானால் அனுகூலம் நிறைய உண்டு! சாதிக்கும் எண்ணங்கள் சக நொடியில் நிறைவேறும். சந்திக்கும் மனிதர்களால் சாதனைகள் ஈடேறும். பெற்றோர் உடல் நலத்தில் அக்கறை தேவை. மாணவர்களின் கல்வி விஷயத்திலும் பொறுப்பான முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியம்.

ஓம் கொள்ளை கொள்வோனே போற்றி, ஓம் கொழுக்கட்டைப் பிரியனே போற்றி, ஓம் கோனே போற்றி

2025 ஆம் ஆண்டிற்கான தினசரி ராசிபலன்களையும், பரிகாரங்களையும்
"ராஜயோகம்" YouTube சேனலில் காணலாம்



## மகரம்

**எத்தகைய துன்பம் எதிர்வந்தாலும், அதை துச்சமாக மதித்து எதிர்நீச்சல் போடத் தெரிந்த மகர ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!**

எத்தனை தடை வந்தாலும் எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் ஆர்வம் காண்பீர்கள். எல்லாவகையிலும் நல்லதே நடக்கும். சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்தாலும் அனுகூலமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும். வக்கணையாய் செயல்பட்டு, வாழ்க்கையில் சிறப்பு பெற்று பலவகையில் பாராட்டும், படிப்படியாய் வளர்ச்சிகளும் பாங்காக காண்பீர்கள். பழைய சொத்துக்கள் விற்க வேண்டி வரும்.



## கும்பம்

**குடும்ப பாசமும், குதூகல எண்ணமும் நிறைந்த கும்ப ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!**

வீணாக மனதை உறுத்திக் கொண்டிருந்த கவலை நீங்கும். எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் திட்டமிடா விட்டால் காரிய தடங்கலை ஏற்படுத்தும். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. சின்ன சின்ன ஆசைகள் கூட சிறப்பாக நடைபெறும், அற்புத மாதமிது. பாதியளவு பணவரவும், ஓரளவு தன வரவும் தேடி வரும். திடீர் மருத்துவச் செலவு, தேவையில்லாத பயணச் செலவு உட்பட அத்தியாவசியப் மற்றும் அனாவசிய செலவுகள் உருவாகும். வெளியிடங்களில் சாப்பிடுவதை முடிந்தளவு தவிர்க்கவும்.

## மீனம்

**தன்னடக்கமும் தாயார் பாசமும் நிறைந்த மீன ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!**

வீடு மாற்றிக் கொள்ள விரும்புபவர்கள் மாற்றிக் கொள்ளத்தக்க தருணம் வந்து சேரும். உங்கள் உழைப்பினை தொடர்ந்து செய்வதன் மூலம் வெற்றியை உங்கள் பக்கம் தக்க வைத்துக் கொள்ளலாம். முற்போக்கான சிந்தனைகள் எப்போதும் பலன் தரும். வித்தியாசம் நிறைந்த செயல்களை செளிணிது அத்தியாயம் படைப்பீர்கள். வருத்தம் தரும் கீழ்நிலைகளில் கூட திருத்தமாக செயல்பட்டு பொருத்தமான சூழ்நிலையை அமைத்துக் கொள்வீர்கள். மற்றவர்களின் ஆலேசானை மிகப்பெரிய பலன் தரும்.



ஓம் கோவிந்தன் மருமகனே போற்றி, ஓம் சடுதியில் வருபவனே போற்றி, ஓம் சங்கரன் புதல்வனே போற்றி



# குழந்தை வரம் அருளும் உச்சிஷ்டகணபதி

ஓம் சங்கடஹரனே போற்றி, ஓம் சதுர்த்தி நாயகனே போற்றி, ஓம் சிறிய கண்ணோனே போற்றி



**இது மிகவும் பழமையான கோவில் என்பதை அந்த ஆலயத்தில் சுற்றி உள்ள சுற்றுச்சூழலை பார்த்தால் அனைவருக்கும் விளங்கும். இந்த ஆலயத்தில் இருக்கக் கூடிய விநாயகர் ஒரு பெண்ணின் உபஸ்சலத்தில் தும்பிக்கை வைத்தது போல இருக்கும்.**

முழு முதல் கடவுளான விநாயகருக்கு ஆலயங்கள் இல்லாத இடமே கிடையாது. சாதாரண மரத்தடி தொடங்கி மிகப்பெரிய மலை வரை இவர் இல்லாத இடத்தை நம்மால் பார்க்க கூட முடியாது. அப்படியான இந்த விநாயகருக்கும் முக்கியமான சில தளங்கள் உள்ளது. அதிலும் மிக முக்கியமானதாக கருதப்படுவது தான் இந்த உச்சிஷ்ட கணபதி ஆலயம்.

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் இந்த ஆலயத்தில் உள்ள விநாயகரை வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. இந்த ஆலயம் எங்கு உள்ளது. அதன் சிறப்பு என்ன என்பதை எல்லாம் ஆன்மீகம் குறித்த இந்த பதிவில் தெரிந்து கொள்ளலாம். குழந்தை வரம் அருளும் உச்சிஷ்ட கணபதி இந்த ஆலயம் ஆனது திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஐந்து நிலை ராஜகோபுரத்துடன் இந்த கோவில் அமைந்துள்ளது.

இதை சுற்றிலும் பரந்த நிலம் உள்ளது இதை கடந்து சென்றால் உச்சிஷ்ட கணபதியை காண முடியும். இந்த ஆலயம் ஆசியாவிலேயே உச்சிஷ்டை மூல கடவுளாக கொண்ட மிகப்பெரிய கோவிலாக கருதப்படுகிறது. இது மிகவும் பழமையான கோவில் என்பதை அந்த ஆலயத்தில் சுற்றி உள்ள சுற்றுச்சூழலை பார்த்தால் அனைவருக்கும் விளங்கும். இந்த ஆலயத்தில் இருக்கக் கூடிய விநாயகர் ஒரு பெண்ணின் உபஸ்சலத்தில் தும்பிக்கை வைத்தது போல இருக்கும். இங்கு விநாயக காம சொரூபமாக பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார். தமிழ்நாட்டில் எந்த விநாயகர் ஆலயத்திலும் இப்படி ஒரு அமைப்பு கிடையாது.

'அதுமட்டுமின்றி நெல்லையப்பருக்கென இந்த ஆலயத்தில் தனி சன்னதி அமைக்க பெற்றுள்ளது. விநாயகரின் பல்வேறு அவதாரங்களில் இந்த உச்சிஷ்ட கணபதி வடிவமும் ஒன்று ஒரு பெண்ணை ஆளுங்கனும் செய்வது போல காட்சி தருவது மிகவும் அபூர்வம் அப்படி காட்சி தரும் இந்த கணபதியே உச்சிஷ்ட கணபதி என்று சொல்கிறோம். இந்த உச்சிஷ்ட கணபதி ஆனவர் குழந்தை வர வேண்டுபவருக்கு கண்கண்ட தெய்வமாக விளங்குகிறார். குழந்தை பேறு அடைவதையும் அந்த குழந்தை தலை சிறந்து விளங்குவதையுமே ஒவ்வொரு தாயும் விரும்புகிறார். அப்படியான ஆசையை நிறைவேற்றி தரக் கூடிய அற்புதமான கணபதியாக இந்த உச்சிஷ்ட கணபதி வீற்றிருக்கிறார்.

இத்தனை சிறப்பு அம்சங்கள் அமைந்ததாலே இந்த ஆலயம் விநாயகர் கோவில்களிலே அதிசயமாக கருதப்படுகிறது. அது மட்டும் இன்றி ஆசியாவிலே இப்படி ஒரு விநாயகர் ஆலயம் இல்லை என்று சொல்லப்படுகிறது. இதனாலையே திருநெல்வேலி மாவட்டத்திற்கு தனிப்பெரும் சிறப்பு உள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. இத்தனை சிறப்பு மிக்க இந்த ஆலயத்தை வாய்ப்புள்ளவர்கள் ஒரு முறை சென்று தரிசித்து அவரின் அருளை பெற்று வாருங்கள். குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் நிச்சயம் ஒரு முறையேனும் இந்த ஆலயத்தின் விநாயகரை தரிசியுங்கள்.

– நித்யா சுந்தர்

ஓம் சித்தம் கவர்ந்தோனே போற்றி, ஓம் சுருதிப் பொருளே போற்றி, ஓம் சுந்தரவடிவே போற்றி

# நவகிரக நாயகன்!

குழந்தை முதல் கிழவர் வரை விநாயகப் பெருமானைக் கண்டாலே மனதில் தனி ஆனந்தம் பிறக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. விநாயகர் சதுர்த்தி நாளன்று களிமண் பிள்ளையாரை வாங்கி வரும்போது விநாயகப் பெருமான் பிரத்யட்சமாய் வீட்டிற்குள் வந்துவிட்டதாள் ஓர் உணர்வு. வீட்டில் பூஜை முடித்த பின்பு அன்றைய தினத்திற்குள் குறைந்தது 108 பிள்ளையாரையாவது தரிசித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் நகர்வலம் கிளம்பிவிடும் பக்தர்களும் இருக்கிறார்கள். இந்த நன்னாளில் அவரவர் ராசிக்குரிய விநாயகப் பெருமானின் மூர்த்தங்களை வழிபட்டால் மேலும் சிறப்பு அல்லவா? இதோ.. 12 ராசிக்காரர்கள் வழிபட வேண்டிய விநாயகரின் திருவுருவங்கள்...



**மேஷம்:** செவ்வாயின் ஆதிக்கத்தைப் பெற்ற நீங்கள் இயற்கையில் வீரம் மிக்கவர்கள். எவருக்கும் அஞ்சாதவர்கள். மனதிற்கு சரியென்று பட்ட விஷயத்தை எவர் தடுத்தாலும் விடாது தைரியத்துடன் செயல்படுத்துபவர்கள். மனோ தைரியம் மிக்க நீங்கக்ஷீம் வழிபட வேண்டியவர் வீர கணபதி.


**ரிஷபம்:** சுக்கிரனின் ஆதிக்கத்தைப் பெற்ற நீங்கள் அம்பிகையின் பரிபூர்ண அருளுக்குப் பாத்திரமானவர்கள். 12 ராசிகளில் சந்திரன் உச்சம் பெற்ற நிலையில் இருப்பது உங்களுடைய ஜாதகத்தில் மட்டுமே. இயற்கையில் ராஜயோகத்தைப் பெற்ற நீங்கள் வழிபட வேண்டியவர் ராஜராஜேஸ்வரியின் அம்சத்தில் உள்ள ஸ்ரீவித்யா கணபதி.

**மிதுனம்:** பல்வேறு திறமையை உடைய நீங்கள் கண் திருஷ்டி தோஷத்தால் அடிக்கடி

ஓம் ஞாலம் காப்பவனே போற்றி, ஓம் ஞான முதல்வனே போற்றி, ஓம் தந்தம் உடைந்தவனே போற்றி

அவதிப்பட நேரிடும். உங்களின் திறமையும், வளர்ச்சியும் அடுத்தவர் மனதில் போட்டி, பொறாமையை வளர்க்கலாம். எதிரிகளைப் பற்றி நீங்கள் அதிகம் கவலைப்படுவதில்லை என்றாலும், மறைமுகமாக வந்து சேருகின்ற தாக்குதல்களிலிருந்து விடுபட நீங்கள் வழிபட வேண்டியவர் கண் திருஷ்டி கணபதி.

**கடகம் :** பல்கலை வித்தகர்களான நீங்கள் பன்முகம் கொண்டவர்கள். அபார ஞானமும், அசாத்தியமான ஞாபக சக்தியும் கொண்ட நீங்கள் அமைதியான முறையில் அடுத்தவர்களை வழிநடத்தும் திறன் மிக்கவர்கள். ஒரு நேரம் சாந்தம், ஒரு நேரம் கோபம் என முகத்தில் நவரசத்தையும் காட்டும் நீங்கள் வழிபட வேண்டியவர் ஹேரம்ப கணபதி.




**சிம்மம்:** இயற்கையில் தைரிய குணம் மிக்க உங்களுக்கு என்றுமே வெற்றித்திருமகள் துணை நிற்பாள். 12 ராசிகளில் தலைமை குணத்தினை உடைய உங்களுக்கு என்றுமே தன்னம்பிக்கை குறையவே குறையாது. அசாத்தியமான மன வலிமையுடன் என்றென்றும் வெற்றியினை ருசித்து வரும் நீங்கள் வழிபட வேண்டியவர் விஜய கணபதி.

**கன்னி:** இயற்கையில் பெண்மை குணத்தினை உடைய நீங்கள் சரியான துணையுடன் செயல்படும் காரியங்களில் வெற்றி காண்பவர்கள். உங்களின் வாழ்க்கைத்துணையுடன் இணைந்து செயல்படும்போது உங்களை வெல்ல எவராலும் இயலாது. உங்களின் வழிபாட்டிற்குரியவர் உச்சிஷ்ட கணபதி.

**துலாம்:** அயராத உழைப்பினை உடைய நீங்கள், மேற்கொண்ட லட்சியத்தினை அடையும் வரை ஓய மாட்டீர்கள். ஒரு லட்சியத்தில் வெற்றி பெற்றாலும் நிறைவு கொள்ளாது, அடுத்த லட்சியத்தை நாடி செல்பவர்கள். வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வானமே எல்லை என்று செயல்பட்டு வரும் உங்களின் வழிபாட்டிற்கு உரியவர் க்ஷிப்ர ப்ரஸாத கணபதி.

**விருச்சிகம்:** இயற்கையில் மிகவும் சுறுசுறுப்பான குணத்தினை உடைய நீங்கள் ஓரிடத்தில் அமர்ந்திருக்காது சதா பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் நினைத்த மாத்திரத்தில் காரியத்தை செய்து முடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தினைக் கொண்டவர்கள். எப்போதும் பரபரப்புடன் இயங்கி வரும் நீங்கள் வழிபட வேண்டியவர் நர்த்தன கணபதி.

**தனுசு:** குரு பகவானின் ஆதிக்கத்தைப் பெற்ற நீங்கள் நேர்மையை மிகவும் நேசிப்பவர்கள். நேர் வழியைத் தவிர குறுக்குவழியில் செல்ல விருப்பமில்லாதவர்கள். தர்ம நெறியில் செல்வதால் அடிக்கடி தர்மசங்கடத்தை சந்தித்து வரும் உங்களுக்கு சங்கடஹர கணபதியே வழிபாட்டிற்கு உகந்தவர்.

**மகரம்:** சனிபகவானின் ஆதிக்கத்தினைப் பெற்ற நீங்கள் தியாக உள்ளம் கொண்டவர்கள். அளவான ஆசை கொண்டவர்கள். விட்டுக் கொடுத்துச் செல்லும் மனப்பான்மையினால் ஒருசில இழப்பினை சந்திப்பவர்கள். இதனால் அடிக்கடி மனக் குழப்பத்திற்கு ஆளாகும் நீங்கள் மனதினை அடக்கி ஆள கற்றுக் கொண்டீர்களேயானால் வெற்றி நிச்சயம். நீங்கள் வழிபட வேண்டியவர் யோக கணபதி.

**கும்பம்:** அனுபவ அறிவின் மூலமாக அடுத்தவர்களை அடக்கி ஆள நினைப்பவர்கள் நீங்கள். தான் அறிந்திராத விஷயத்தையும் கூட தனக்குத் தெரியாது என்று வெளிக்காண்பிக்காமல் செயல்படுவீர்கள். அதேநேரத்தில் அவற்றை அறிந்து கொள்வதிலும் ஆர்வம் செலுத்துபவர்கள். புதிய விஷயங்களையும் எளிதில் கற்றுக்கொண்டு தனித்திறமை மூலம் முன்னேறி வரும் நீங்கள் வழிபட வேண்டியவர் சித்தி கணபதி.

**மீனம்:** இயற்கையில் கள்ளம், கபடம் இல்லாத குழந்தைத்தனமான குணத்தினை உடையவர்கள் நீங்கள். அடுத்தவர்களிடம் எதைப் பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் எல்லோரும் நல்லவரே என்ற எண்ணத்துடன் பழகி வருவீர்கள். சூது, வாது தெரியாத நீங்கள், தான் நினைத்ததை அடைந்துவிட வேண்டும் என்ற பிடிவாத குணத்தினை உடையவர்கள். உங்களுடைய வழிபாட்டிற்கு உரியவர் பால கணபதி.

**– சரவணன்**

**ஓம் தந்தத்தால் எழுதியவனே போற்றி, ஓம் தும்பிக்கை உடையாய் போற்றி, ஓம் துயர் துடைப்பவனே போற்றி**



# தீவினைகளை வேரறுக்கும் பிள்ளையார்பட்டி விநாயகர் கோவில்

நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை தரணியின் மேற்கு நோக்கி சில கிலோ மீட்டர் சென்றால் பிள்ளையாருக்காக தோன்றிய ஒரு கிராமம் உள்ளது. இந்த கிராமத்தின் பெயர் பிள்ளையார்பட்டி.

சோழர்களின் அழகிய ஆலயத்தோடு எழில்மிகு தோற்றத்துடன் அமைந்திருக்கிறது இங்குள்ள ஹரித்ரா விநாயகர் கோவில். பிள்ளையார்பட்டி கோவிலில் உள்ள ஹரித்ரா விநாயகர் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தவர். இந்த கோவிலில் உள்ள ஹரித்ரா விநாயகரை மாமன்னன் ராஜராஜ சோழன் பிரதிஷ்டை செய்ததாக கூறப்படுகிறது.

தல வரலாறு

ராஜராஜ சோழன் தனது வாழ்க்கையில் பல்வேறு சாதனைகளையும், சிறப்புகளையும் பெற்றிருந்தார். அதனை உலகுக்கு எடுத்து காட்டும் விதமாக அதிசயங்களே அசந்து போகும் அளவுக்கு அமைக்கப்பட்ட அற்புதமான ஆலயம் பெருவுடையார் கோவில் எனப்படும் தஞ்சை பெரிய கோவில். பெரிய கோவிலை பிரதிஷ்டை செய்வதற்காக ராஜராஜ சோழன், புதுக்கோட்டை மாவட்டம் சித்தன்னவாசலில் உள்ள சிற்பக் கூடத்தில் இருந்து நந்தி மற்றும் விநாயகர் சிலைகளை யானை பூட்டிய தேரில் வைத்து எடுத்து வந்ததாக கூறப்படுகிறது.(காவிரியின் பிறப்பிடமாக இருக்கும் கர்நாடக மாநிலம் குடகில் இருந்து இந்த பிள்ளையாரை எடுத்து வந்ததாகவும் மற்றொரு கருத்து நிலவுகிறது.)

தேர் அச்சு முறிந்தது அப்படி வரும் வழியில் விநாயகர் சிலை வைக்கப்பட்டிருந்த தேரின் அச்சு முறிந்து தேர் நின்று விட்டது. அப்போது வீரர்கள் முறிந்த தேர் அச்சை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டனர். வீரர்கள் தேர் அச்சை சரி செய்த பின்னும் தேர் அந்த இடத்தில் இருந்து நகன்று செல்லவில்லை. இதனால் இந்த இடத்தில் தான் விநாயகர் கோவில் கொண்டு இருக்க விரும்புகிறார் என கருதிய ராஜராஜ சோழன், விநாயகர் சிலையை தஞ்சை பெரிய கோவிலுக்கு எடுத்து செல்ல வேண்டாம் என முடிவு செய்து அச்சு முறிந்து தேர் நின்ற இடத்தில் விநாயகரை

ஓம் தெருவெலாம் காப்பவனே போற்றி, ஓம் தேவாதி தேவனே போற்றி, ஓம் தொந்தி விநாயகனே போற்றி





பிரதிஷ்டை செய்து கோவில் எழுப்பினார். இதுவே பிள்ளையார்பட்டி ஹரித்ரா விநாயகர் கோவில் ஆகும். இதனால் இந்த ஊர் பிள்ளையார்பட்டி என பெயர் பெற்றது. இந்த கோவிலில் உள்ள விநாயகரை வழிபட்டால் தீய வினைகள் அகலும் என்றும் கிரக தோஷங்களால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பக்தர்கள் தங்களை தற்காத்துக்கொள்ள முடியும் என்பதும் பக்தர்கள் நம்பிக்கை. மேலும் நோயற்ற வாழ்வை அளித்து ஆயுள் பலத்தை அளிக்கும் சக்தி இத்தலத்தில் உள்ள விநாயகருக்கு உண்டு என்பதால் இந்த கோவிலுக்கு பக்தர்கள் வந்து செல்ல தவறுவது இல்லை.

சோழர் கால கட்டிட அமைப்பு தற்போது உள்ள இந்த கோவில் 17ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக சொல்லப்படுகிறது. சோழர் கால கட்டிட அமைப்பில் கோவில் அமைந்துள்ளது. 11 அடி உயரமும், 5 அடி அகலமும் உள்ள பிள்ளையாரை பீடத்திஸ்ல் அமர்த்தி அதன் மீது ஆலயத்தை கட்டியதாக கூறப்படுகிறது. அதற்கான அடையாளங்களும் உள்ளன. இந்த கோவிலில் பெரிய பிள்ளையாரை தரிசிக்க மிகவும் அடக்கமாக செல்ல வேண்டும் என்பதற்காக சிறிய நுழைவாசல் அமைக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

பல்வேறு சிறப்புகளை பெற்ற இந்த கோவிலில் குடமுழுக்கு வருகிற 9ந் தேதி(ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ளது. இதையொட்டி கோவிலில் பல்வேறு பணிகள் நடந்து வருகிறது. இந்த கோவிலில் பிள்ளையார் மட்டுமின்றி அய்யப்பன், சிவன், நவக்கிரக சன்னதிகளும் அமைந்துள்ளன.

இந்த கோவிலில் சிவன், நவக்கிரகம், பைரவர் ஆகிய சன்னதிகள் ஒரே நேர்கோட்டில் அமைந்திருப்பது சிறப்பம்சம் ஆகும். இந்த கோவிலில் கார்த்திகை சோமவார வழிபாடு, பிரதோஷம், அஷ்டமி பூஜை, கிருத்திகை வழிபாடு ஆகியவை விமரிசையாக நடக்கும்.

கடன் நிவர்த்தி விநாயகர்:

இந்த கோவிலில் உள்ள ஹரித்ரா விநாயகர் பக்தர்களால் கடன் நிவர்த்தி விநாயகர் என அன்போடு அழைக்கப்படுகிறார். காரணம் இங்கு நடைபெறும் சங்கடஹர சதுர்த்தி வழிபாட்டில் தொடர்ந்து 8 முறை கலந்து கொண்டு வழிபட்டால்

-முருகன்

ஓம் தொழுவோ நாயகனே போற்றி, ஓம் தோணியே போற்றி, ஓம் தோன்றலே போற்றி



நினைத்த காரியம் நிறைவேறும். தீராத கடன் பிரச்சனைகள் தீரும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. ராகுகேது தோஷம், திருமண தடை நீங்கும். வினை தீர்ப்பான் விநாயகர் என்ற சொல்லுக்கு ஏற்ப பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றும் வல்லமை பெற்றவர் இக்கோவில் விநாயகர்.

சிறப்பு வழிபாடு

பிள்ளையார்பட்டி விநாயகர் கோவிலில் விநாயகர் சதுர்த்தி மற்றும் கார்த்திகை சோமவார வழிபாடு மிக விமர்சையாக நடைபெறும். மேலும் பிரதோஷ வழிபாடும் இக்கோவிலில் நடைபெறுவது தனி சிறப்பு. பிரதோஷ தினத்தன்று நந்தியெம்பெருமானுக்கு மஞ்சள், பால், திரவியப்பொடி, தயிர், சந்தனம் உள்ளிட்ட பொருட்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்படும். அஷ்டமி பூஜை அன்று கால பைரவருக்கு மலர் அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்படும். தற்போது இக்கோவிலில் புதிதாக அகஸ்தியர் சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. வியாழக்கிழமைதோறும் அகஸ்தியர் வழிபாடும் நடைபெறுகிறது.

தலவிருட்சம்

பிள்ளையார்பட்டி விநாயகர் கோவிலில் காலை 7.30 மணி முதல் 10 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரையும் சாமி தரிசனம் செய்யலாம். கோவில் தலவிருட்சமாக வில்வமரம் அமைந்துள்ளது. இந்த மரம் சிவனின் நேர் எதிரில் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

இந்த கோவிலில் அய்யனார், நாகலம்மன், முருகன், தட்சிணாமூர்த்தி, துர்க்கை, சண்டி கேஸ்வரர் ஆகிய தெய்வங்கள் தனி சன்னதியில் உள்ளனர். விநாயகரின் பின்பகுதியில் ஸ்ரீ சக்கரம் அமைந்துள்ளது. வயிற்றுப்பகுதியில் ராகுகேது அமைந்திருப்பது இத்திருத்தல மகிமையை எடுத்துக்காட்டும் விதமாக உள்ளது. ஹரித்ரா விநாயகருக்கு புளியோதரை, சர்க்கரை பொங்கல் படையலிட்டு வழிபடுவது கூடுதல் சிறப்புகளை தரும் என பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கோவில் ஹரித்ரா விநாயகர் மனம் உருகி வேண்டும் பக்தர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பார் என்பதில் எள்ளளவும் அய்யம் வேண்டாம் என்பதே பக்தர்களின் கூற்றாகும். நந்தி வாகனத்தில் விநாயகர்

இந்த கோவில் விநாயகர் சிலை உயரமானதாக கருதப்படுகிறது. இந்த விநாயகர் அருமையான சிற்ப வேலைபாடுகளுடன் செதுக்கப் பட்டுள்ளார்.

இத்தகைய சிலை அமைப்புகளை காண்பது அரிது என கூறப்படுகிறது. வழக்கமாக கோவில் கட்டி பிரதிஷ்டை செய்வது வழக்கம். ஆனால் இந்த கோவில் பிரதிஷ்டை செய்து இதன் பிறகு கோவில் கட்டப்பட்டது தனி சிறப்பு ஆகும். இக்கோவிலில் பிள்ளையாருக்கு வாகனமும் மாறுகிறது. முன்பகுதியில் மூஷிக வாகனத்துக்கு பதில் நந்தியே எழுந்தருளியிருக்கிறார்.

கோவிலுக்கு செல்வது எப்படி?

தஞ்சையில் இருந்து5 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்த கோவிலுக்கு செல்ல தஞ்சை புதிய பஸ் நிலையத்தில் இருந்து பஸ் வசதி உள்ளது. வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பக்தர்கள் தஞ்சை புதிய பஸ் நிலையம் வந்து அங்கிருந்து ஆட்டோ, ஷேர் ஆட்டோ, மினி பஸ் மூலம் சென்று வரலாம். சென்னையில் இருந்து இந்த கோவிலுக்கு வர விரும்பும் பக்தர்கள் பஸ் அல்லது ரெயில் மூலம் தஞ்சைக்கு வர வேண்டும்.

பின்னர் அங்கிருந்து தஞ்சை புதிய பஸ் நிலையத்துக்கு சென்று அங்கிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள பிள்ளையார்பட்டி பிள்ளையாரை தரிசிக்கலாம். தென்மாவட்டங்களில் இருந்து இந்த கோவிலுக்கு வர விரும்பும் பக்தர்கள் தஞ்சைக்கு வந்து அங்கிருந்து மேற்கண்ட வழித்தடம் வழியாக கோவிலை அடையலாம்.

**– யூகிதான்**

**ஓம் நம்பியே போற்றி, ஓம் நாதனே போற்றி, ஓம் நீறணிந்தவனே போற்றி, ஓம் நீர்க்கரையமர்ந்தவனே போற்றி**

# காணிப்பாக்கம் ஸ்ரீ வரசித்தி விநாயகர்!



ஸ்ரீகாணிப்பாக்கம் வரசித்தி விநாயகர் சாட்சியாக, நான் சொல்வதெல்லாம் சத்தியம் என்று எவர் கூறுகிறாரோ, அவருடைய இந்த சத்தியப்பிரமாணம் இன்றளவும் ஆந்திர மாநிலம் கிராமப் பஞ் சாயத்துகளில் நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

காணிப்பாக்கம் என்று இப்போது அழைக்கப்படும் ஸ்தலம். சுமார் ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னால் விஹாபுரி கிராமமாக இருந்தது. அந்த கிராமத்தில் மூன்று நண்பர்கள் ஒற்றுமையாக விவசாயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மூவருமே உடல்குறை உள்ள வர்கள். ஒருவரால் பேச முடியாது. ஒருவர் பார்வை யற்றவர். மூன்றாம்வரால் கேட்க இயலாது. கிணற்றிலிருந்து ஏற்றம் மூலம் நீர் முகந்து வயல்களில் பாய்ச்சிக் கொண்டிருந்தார்கள். செவியற்ற வரும், பார்வையற்றவரும் ஏற்றக் காலில் ஏறி நின்று மிதிக்க ஏற்றம் சுமந்துவரும் நீரை கீழே இருக்கும் பேச்சிழந்தவர் கையால் பற்றி கால்வாயில் ஊற்றுவார்.

வறட்சியால் கிணற்றில் நீர் வற்றிவிடவே பேச்சிழந்தவர் உள்ளே இறங்கி ஊற்று நீர் கிடைக்குமா என்று பார்க்க மண்வெட்டியால் தோண் டினார். அப்போது மண்வெட்டி பாறை ஒன்றில் மோத அந்தப் பாறையிலிருந்துரத்தம் பீறிட்டது. அதைப்பார்த்த அவர் பயந்து ஐயோ என்று அலறினார். கிணற்றுக்கு மேலே நின்றிருந்த பார்வையற்றவருக்கும் இவர் கத்தியது கேட்க இருவரும் உள்ளே எட்டிப்பார்த்தனர் ஆமாம். செவியற்றவர் கேட்டார் பார்வையற்றவர் பார்த்தார். கிணற்றிலிருந்து நீருக்கு பதிலாக குருதி பெருகுவதைக்கண்டு இவர்கள் கூச்சலிட வயிலில் வேலை செய்துகொண்டிருந் தவர்கள் ஓடோடி வந்தார்கள். நடந்த அதிசயங்களைக்கண்டு அவர்கள் பிரமித்து நின்றார்கள். சில விநாடிகளுக்குப் பிறகு பிரமிப்பிலிருந்து விடுபட்டு கிணற்றுக்குள் இறக்கினர். உள்ளே ஒரு பாறை அமைப் பிலான விநாயகர் சிலையையும் அதன் தலை யிலிருந்து ரத்தம் வருவதையும் பார்த்தனர். ஒரு துணி எடுத்து குருதி வழிந்த இடத்தில் வைத்துக் கட்டினார்கள். பிறகு அந்த சிலையை வெளியே எடுத்து வந்தார்கள்.

மேலே வந்து விநாயகரை நிறுவி, தற்காலிகக்கோவில் ஒன்றை நிர்மானித்தார்கள்.

ஓம் பழத்தை வென்றவனே போற்றி, ஓம் பாரதம் எழுதியவனே போற்றி, ஓம் பரம்பொருளே போற்றி

அருள் ராஜயோகம்

மலர்-12 இதழ்-02 ஆகஸ்ட்-2025

வெளியிடுபவர் / ஆசிரியர்

SRJ “ராஜயோகம்”

Dr. K. RAMAAYYAPPAN Ph.D., (USA)

அருள் ராஜயோகம்

ஆன்மிக .ஜோதிட.மருத்துவ மாத இதழ்

புது எண் 139, பழைய எண் 7,
பன்னா பிளாசா, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம், சென்னை – 24.
தொலைபேசி எண் ; 044-24849187
அலைபேசி எண்கள் ;
99404 31377 / 96772 76129
99529 91118 / 98401 60068

e-mail : arulrajayogam@gmail.com
website : www.arulrajayogam.com

ஜோதிடம், ஆன்மீகம், மருத்துவம் சம்பந்தமான தங்களின் படைப்புகளையும், புகைப்படங்களையும் அனுப்பி வைக்கவும். ஆசிரியர் குழுவின் பரீசீலனைக்குப் பிறகு பிரசுரிக்கப்படும்.

ஆயுள் சந்தா
ரூ. 5000/-




அதன் பிறகு கிராமமக்கள் ஒவ்வொருவரும் அவரை வேண்டிக்கொண்டு உடைத்த தேங்காய்க ளிலிருந்து வெளிப்பட்ட நீர் ஒரு காணி பரப் பளவில் பரவிநின்றதாம். அதாவது சுமார் ஒன்றேகால் ஏக்கர்! காணி நிலத்தில் பாரக மானதால் (தெலுங்கில் பாரகம் என்றால் நீர் பாய்தல் என்று பொருள்) இந்ததலம் காணிப்பாரகமாகி பிறகு காணிப்பாக்கம் ஆனது. ஸ்ரீகாணிப்பாக்கம் வரசித்தி விநாயகர் சாட்சியாக, நான் சொல்வதெல்லாம் சத்தியம் என்று எவர் கூறுகிறாரோ, அவருடைய இந்த சத்தியப்பிர மாணம் இன்றளவும் ஆந்திர மாநிலம் கிராமப் பஞ்சாயத் துகளில் நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. சத்தியத்துக்கு மாறாக எவரேனும் நடத்துகொண்டால், அவர் தொண்ணூறு நாட்களுக்குள்ளேயே விநாயகரால் தண்டிக்கப்படுவார். இதை அனுபவப்பூர்வமாக மக்கள் கண்டிருக்கிறார்கள். ஆந்திர மாநிலம் சித்தூர் பேருந்து நிலையத்திலிருந்து (12) கிலோ மீட்டர் பயணத்தில் காணிப்பாக்கத்தை அடையலாம். சுயம்புவான விநாயகர் கிணற்றின் மேல் அமைக்கப்பட்டுள்ளார். சுற்றி என்றும் வற்றாத கிணற்று நீரே பிரசாதமாக வழங்கப்படுகிறது.

இவருக்கு அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனை அனைத்தும் உண்டு. ஆனால் விசேஷ அலங்காரம் எதுவும் செய்வதில்லை. இவ்விநாயகர் ஆண்டு தோறும் அகலமாகப் பெருகி வருவது ஆன்மிக அதிச யமாக விளங்குகிறது. அன்று விநாயகருக்குச் செய்வித்த வெள்ளிக் கவசம் இன்று சிறியதாகவிட்டது. என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! விநாயகர் வளர்வது போலவே அவரை தரிசிக்க வரும் பக்தர் களும் வளம் பெருக வாழ்கிறார்கள். சாதாரண நாளில் கூட நிரம்பி வழியும் பக்தர் கூட்டம் இதை உண்மை என்று நிரூபிக்கிறது. நல்லொழுக்கம் கைவரப் பெறவும் இவர் வரம் அருள் கிறார். ஆமாம் இவர் முன் நின்று இனி குடிக்க மாட்டேன், புகைக்க மாட்டேன் சூதுவை நாடமாட்டேன் என்று மனமுருக வேண்டுவோர் அந்தத்தீயப் பழக்கங்களிலிருந்து விடுபடுகிறார்களாம்! விநாயகரின் தந்தை சிவபெருமான் திருவானைக்கா என்னும் திருத்தலத்தில் லிங்க வடிவில் தண்ணீருக்குள் இருப்பது போல் ஆந்திர மாநிலம் சித்தூருக்கு(12) கி.மீ. தொலைவில் உள்ள காணிப்பாக்கத்தில் உள்ள (வரசித்தி) காணிப்பாக்கம் விநாயகர் கோவில் மூலவரான பிள்ளையார் முழங்கால் வரை உள்ள தண்ணீருக்குள் இருந்தபடி அருள் தருகிறார்.

– சக்தி ●

Owned & Published by K.RAMAAYYAPPAN Published from N.No 139, O.No. 7, Panna Plaza, Arcot Road, Kodambakkam, Chennai - 600 024 and Printed by Mrs. R.RADHA, at APSARA ART PRINTERS, 18 (N.No. 67), P.V.Koil I Street, Pudupet, Royapettah, Chennai - 600 014. Editor : K.RAMAAYYAPPAN.

# அற்புத ஆற்றல்களை அள்ளித்தரும் அருட்பெரும் நூல்கள்

## ஜோதிடர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!

## சூட்சுமத்தை உணர்த்திடும் அருட்பிரசாதம்!!

AP 001




ரூ.350/-

AP 002




ரூ.350/-

AP 003




ரூ.250/-

AP 004




ரூ.300/-

**8 நூல்களும் இணைந்த (COMBO OFFER)**

முந்துங்கள்! இச்சலுகை குறிப்பிட்ட காலம் வரை

~~ரூ. 3400/-~~

**ரூ. 3100/-**

AP 005




ரூ.550/-

AP 006




ரூ.425/-

AP 007




ரூ.425/-

மேலும் தனி புத்தகம் வேண்டுவோர் அந்தந்த புத்தகத்திற்குரிய தொகையை கிழ்கண்ட எமது வங்கி கணக்கில் பணம் செலுத்திவிட்டு தொடர்புக்கொள்ளவும் புத்தகம் உங்களுக்கு பதிவுத் தபால் (Regd. Parcel) மூலம் அனுப்பி வைக்கப்படும். கொரியர் மூலம் அனுப்ப இயலாது

**செல்: 72999 21880 / 88386 38900**

**பணம் அனுப்ப வேண்டிய Bank Details**

1. **C. Raju & R. Radha,**
   **Post Office Savings Bank**
   **A/C No. 3610336507 (Chennai-14)**
2. **C. Raju & R. Radha,**
   **Karur Vysya Bank**
   **(Whites Road, Chennai-14)**
   **A/C No. 1219172000006855,**
   **IFSC - KVBL0001219**
3. **C. Raju & R. Radha,**
   **Tamilnad Mercantile Bank**
   **(Chennai TTK Road-Royapettah)**
   **A/C No. 123100050303219,**
   **IFSC - TMBL0000123**
4. **Apsara Publications,**
   **IDBI Bank**
   **(Chennai-Gopalapuram)**
   **A/C No. 165410200000143,**
   **IFSC - IBKL0001654**
5. **C. Raju, Indian Bank**
   **(Chennai-Royapettah)**
   **A/C No. 426677897,**
   **IFSC - IDIB000R021**




AP 008 ரூ.750/-

**ARUL RAJAYOGAM** TAMIL MONTHLY Registrar of Newspaper for India No. TNTAM/2014/57494 Registered: TN/CC(S) DN 521/24-26. Posted at Patrika Channel Egmore RMS. Date of Publication: 1st week of every month. DATE OF POSTING: july 21-27

"திக்கற்ற யாவரும்"



"ஒப்பற்ற பயன்பெற"

"27 நட்ஷத்திரங்களை"

உள்ளடக்கிய "12 ராசிகளுக்கான"

தினப்பலன்கள்

அனைவருக்குமே அனுதினமும் "ராஜயோகம்" தரக்கூடிய

"ஆன்மீக அதிர்ஷ்ட மந்திரம்"

மற்றும் "ஆன்மீக தகவல்கள்"

தெரிந்துகொள்ள:

YouTube™

R ராஜயோகம் டிவி

ஆழமான "ஆன்மீகத்தையும்" அறிய வேண்டிய "சாஸ்திரத்தையும்"

அற்புதமான "மனோ திடத்தையும்" அனுதினமும் வாரி வழங்கும்.

SRJ "ராஜயோகம்" Lion Dr.K.Ram Ph.D (USA)

S R J GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

Singapore Malayasia Srilanka Australia London